256

# பெரியார் மேடையில் அடிகளார்

விலை அணு 4.

திருமுருகன் நிலையம்,
குன்றக்குடி.

R34யM79
N56
727

# பதிப்புரை.

1956-ம் ஆண்டு 22 – 9 – 56 தேதியில் நடக்கமுடியாதது நடந்தது. கருத்திலும், கொள்கையிலும் வேறுபாடுடையவர்கள் ஒரு மேடையில் உறவாடினுர்கள், ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொண்டனர்! ஆம் இந்த நிகழ்ச்சி புதுமையும் சிறப்பும் பொருந்தியதொன்று. ஆனுல் பண்பாட்டின் வழிய பயின்றதொரு நிகழ்ச்சி. தற்கால தமிழகத்தில் கருத்து, கொள்கை வேறுபாடு உடையவர்களைத் திட்டுவதே தமது தலைமைக்கு வழி எனக் கருதும் இந்நாளில்—அத்தகு இரு பெரும் பெருமக்கள் ஒரு மேடையில் கலந்து உறவாடுவது சாலவும் போற்றுதற்குரியதன்ருே? அது மட்டுமா? தங்கள் கருத்துக்களையும், கொள்கைகளையும் விடாமல் அழுத்தம் திருத்தமாகவும் பேசியிருக்கிருர்கள். தவத்திரு அடிகளார் அவர்கள், மாறுபட்ட கருத்துடை திராவிட கழக மேடையில், பெரியார் முன்னிலையில் மதத்தைப்பற்றிய கருத்துக்களை எவ்வளவு துணிவாகவும், ஆணித்தரமாகவும் — அச்சமின்றி — கொள்கை—கருத்து உறுதியோடு எடுத்துக்கூறியுள்ளார் என்பதை நினைக்கும்பொழுது மகிழ்ச்சி மேலிடுகிறது. தவத்திரு அடிகளார் அவர்கள் நாத்தீகரை ஆதரிக்கிருர் என்று பின்னணியில் பொல்லாங்கு கூறியவர்கள் இதனைப் படித்துப்பார்த்து அடிகளாரின் உறுதியான கொள்கைத் திறனையும் அதே காலத்தில் பண்பாட்டின் பெருந்தன்மையையும் விளங்கிக் கொள்வார்கள் என்று நம்புகின்ருேம். தந்தை பெரியார் அவர்களும் தன் கருத்துக்களை உறுதியாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார்கள். சமயத்தைப் பற்றி அவர் கொண்டுள்ள கருத்தை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது இந்த பேச்சின்மூலம்.

இத்தகைய உயர்ந்த கருத்து வளங்களைக் கொண்ட இந்த சொற்பொழிவு நூலை எமது நிலையத்தின் முதல் வெளியீடாக பொது மக்கள் முன்னிலையில் படைக்க திருவருள் பாலித்த திருமுருகனுடைய திருவடிகளை வந்தித்து வாழ்த்துகின்றோம். இதை பிரதி எடுத்துக் கொள்ள ஒலிப்பதிவு இயந்திரத்தைக் கொடுத்து உதவிய தந்தை பெரியார் அவர்களுக்கும், ஒலிப்பதிவிலிருந்து பிரதி செய்து கொடுத்த நண்பர்கள் தேவகோட்டை ப. கிருஷ்ணன், கெ. எம். சுப்பையா இருவர்களுக்கும் நன்றி. வாசகர்கள் இந்தமாதிரி பல வெளியீடுகள் வெளிவர ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குன்றக்குடி,<br>16—11—56. } திருமுருகன் நிலையத்தார்.

# முன் உரை

இரண்டு எண்ண முதல் பெரியார்களின் எண்ண மோதல் பற்றி தமிழ்நாட்டு மக்களின் மனக்களிப்பு ஒருபுறம், அதே இருவர் கூடிப்பழகும் தமிழ்நாட்டுப் பண்பைக் கண்டு வெகுளி மறுபுறம். கொண்ட கொள்கையில் பற்றும், தர்க்கவியல் வலிவும் இருப்பவர்கள் எந்த பிற கொள்கையும் தன்னை ஆட்கொண்டுவிடும் என ஐயப்பட மாட்டார்கள். இதற்கு சான்று உலக எதிர் நீச்சுப் பெரியார்கள்.

மனித நல்வாழ்வை துலாக்கோலாகக் கொண்டவரோ, அல்லது மானிட நல்வாழ்வுப் பணியே தெய்வப்பணி என எண்ணம் கொண்டவரோ தங்களுக்குள் தேவையற்ற மோதுதலை தவிர்க்கும் பண்பை உடையவர்கள் என்பதை நாங்கள் 22-9-56-ந்தேதி உழைப்பவர்கள் அதிகம் கொண்ட பொன்மலைப் பட்டியில் பார்த்தோம்.

அடிகளார் தலைமையில் பெரியார் ஈ. வே. ரா. வுக்கு பிறந்தநாள் விழா கொண்டாடப்பெறும் என்ற சுவரொட்டிகளைக் கண்டோம் பல இடங்களில். வியந்தோம், விரைந்தோம் நேரில் காண. காட்சியை மனம் படம் பிடித்தது. மனதும் நிறைவு கண்டது. திறனும், உரமும் கொண்ட அடிகளாரின் தன்னிலை மாருத் தற்கவியல் பேச்சால்.

பொன்மலைப்பட்டி நிகழ்ச்சி பற்றி வெகுண்ட சிலருக்கு உண்மை தெரியவேண்டும் என்ற அவா அடிகளார்க்கு ஏற்பட்டதுபோலும். எங்களுக்கு ஆணை தந்தார்கள், நிகழ்ச்சிகளையும், உரைகளையும் தொகுத்துத் தரவேண்டுமென்று. நிகழ்ச்சிகளையும்,

உரைகளையும் தந்துள்ளோம். தமிழர்களுக்கு—தமிழர் தன் நல்வாழ்வு தழைக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டார்களுக்கு—தமிழன் கண்ட கடவுள் தன்மை தரணியில் நிலைக்கவேண்டும் என்பவர்களுக்கு ஸ்ரீ அடிகளாரின் கார் பொன்மலைப் பட்டிக்குள் நுழைந்தது. மலர்ப் பூங்காவில் தேனீக்கள் மொய்ப்பதுபோல் மொய்த்தனர் மக்கள், அருள்த்தேன் தரும் மலர் உள அடிகளாரிடம்.

கருப்பு உடை வாலிபர்கள் புடைசூழ அழைத்துச் சென்றனர். அடிகளார் வாழ்க, பெரியார் வாழ்க என்ற ஒலிகள் விண்ணைப் பிளந்தன. வாணவெடி ஒலி கேட்கவில்லை, மக்கள் வாழ்த்தொலியால்.

கருந்துணியால் அலங்கரிக்கப்பட்ட மேடை, அதில் காவி உடை அணிந்த தமிழ்நாட்டின் அருள் உருவம். பல கருத்தோட்டத்துடன் கூடியுள்ள மக்கள் கடல் எங்களை அண்மையில் நாங்கள் குளித்த திருப்பராத்துறை நதி சங்கமத்தை எங்களுக்கு நினைவூட்டியது. ஏதோ புதிதன கிடைத்திருப்பதாக சிலரிடமும், ஏதோ வியக்கத்தக்கது நிகழும் என்று பலரிடமும் கண்டோம்.

மேடைமீது அடிகளார் ஏறுகிறார், பெரியார் சிரம் தாழ்த்தி கரம் தாங்கி வரவேற்கிறார். மக்களின் ஆனந்தக் கடல் வாழ்த்துதல் மூலமும், கைதட்டல் மூலமும் பிரதிபலிக்கிறது.

மேடையில் மலர் மலை, இரு கோணங்கள் ஒன்று சேருவதாகக் கூறித் திரு. எம். ஆர். ராதா வரவேற்று விழாவைத் தலைமை தாங்கி நடத்தித்தர வேண்டுகின்றார்.

அடிகளார் அவர்களும் தலைமை வகித்து முன்னுரை வழங்கினர். பின்னர் திருச்சி நகரமன்றத் தலைவர் டாக்டர் திரு. மதுரமும், திரு. தெ. பொ. வேதாசலம் மற்றும் சிலரும் ஒருவர் பின் ஒருவராகப் பேசினர். சிறப்பிக்கும் பொருட்டு இறுதியாக, ஏற்பாடு செய்த வாலிபர் சங்கத்தார் ஒரு பொற் சங்கிலியையும், புத்தர் உருவம் வரைந்த நீல நிற பட்டு (Vailit) ஆடையையும் பெரியாருக்கு அணிவிக்க வந்தார்கள்.

மனக் களிப்புக்கொண்ட பெரியார், பண்பாடு உள்ளம் கொண்ட பெரியார், "அடிகளாரிடம் கொடுங்கள், அவர்கள் கையால் வழங்கட்டும், அதுவே சிறப்பு" என்றூர்கள் அவர்களிடம். அவ்வண்ணம் மக்களிடம் அன்பளிப்பாகப் பெற்ற அந்த பொற்சங்கிலியையும், பட்டாடையையும் பொன்மலைப்பட்டி இளைஞர் கழகத்தார் அடிகளாரிடம் தந்து அதை பெரியாருக்கு அணிவித்து சிறப்பிக்க வேண்டினர்.

அடிகளார் அதனைப் பெற்று பெரியாருக்கு அணிவித்தார்.

சுவரொட்டியைக் கண்டு வியந்த நாங்கள் இது வரை எந்த வியப்பையும் காணவில்லை அங்கு. ஆனல் ஒரே ஒரு வியப்பைத்தான் நாங்கள் அடிக்கடி கண்டோம். அதாவது, சமயம் சமூகத்திற்கு தீங்கு செய்யவில்லை என்று சொல்லும்போதும், சமயத்தைச் சார்ந்த சிலர் செய்தவைகளை சமயம் என்று தவருகக் கருதுகிறவர்களின் போக்கை உதாரணத்துடன் விளக்கும்போதும், கடவுளை எதிர்க்கவில்லை, கடவுள்களைத்தான் எதிர்க்கிறேம் என்று பெரியார் அவர்கள் கூறியபோதும், அடிகளார் தன்

ஒவ்வொரு பேச்சின் இறுதியிலும் கடவுளின் பேரால் என்று கூறும்போது மக்கள் ஆச்சரியமும், அவாவும் கொண்ட களிப்படைந்த கைதட்டலின் போதும்தான் வியப்படைந்தோம்.

எவ்வளவு உள்ள வலிமை அடிகளார்க்கு இருக்கிறது என்று அன்றுதான் கண்டோம். தனது ஆதரவாளர்கள் மத்தியில் கைதட்டல் பெற லாம், ஆனல் மாற்றுக் கருத்துப் பாசறையினுள் 40-வருடங்கள் எதிர் நீச்சு அடித்து, அதிலும் மங் காமல் நிற்கும் ஒருவர் முன்னிலையில், நேரில் "நீங்கள் தவருக சமயத்தைக் கருதுகிறீர்கள், சம யத்தைச் சார்ந்த சிலரின் செய்கையை வைத்துப் பார்க்கிறீர்கள், ரசிபுடீனை வைத்து ஏசுவையும், பௌராணிகத்தை வைத்து சைவத்தையும் கணிப் பது தவறு என்று கூறியதுடன், நாவுக்கரசரையும், மாணிக்கவாசகரையும், வள்ளுவரையும் உதாரணத் துடன் எடுத்தாண்டு கூறிய வைர மணி தமிழ்ச் சொற்கள் எங்களை, தமிழ்நாட்டின் சமயப் பாது காவலர் குன்றக்குடி இளவலே என்ற இறுதியும் உறுதியும் கொண்ட முடிவுக்குள்ளாக்கியது.

இதுவே அன்று நாங்கள் கண்ட காட்சியும் உண்மையும். தமிழர்களே படியுங்கள், தமிழ் சமயத் தாரே, பெரியோரே படியுங்கள். சைவர் நமக்கெல் லாம் ஒருவர் யார் என்ற முடிவுக்கு வருவீர்கள்.

எங்களின் முன்னுரையை வேண்டிய பிரசுர கர்த்தர்களுக்கும், திருப்பெருந்திரு அடிகளார் அவர் களுக்கும் எங்கள் உளம் நிறை நன்றி.

வணக்கம்.

கி. ம. சுப்பையா.

உ

சிவகுகமயம்

# பெரியார் மேடையில் அடிகளார்

அன்பிற்கும் நட்பிற்கும் உரிய பெரியாரவர்களே! அவையில் கூடியிருக்கும் பெரியோர்களே!

பெரியாரவர்களின் பிறந்ததின விழாவில் நான் கலந்துகொள்ள வேண்டுமென்று பொன்மலைபட்டி இளைஞர்கள் வந்து கேட்டுக்கொண்டார்கள். நானும் மகிழ்ச்சியோடு இசைவு தந்தேன். இந்த விழாவில் நான் கலந்து கொள்வதில் இரண்டு வகைகளில் திருப்தி அடைகின்றேன். நடிகர் ராதா அவர்கள் கூறியதுபோல நாங்கள் இருவரும் வேறுபட்ட துறைகளில் பணி செய்பவர்கள். அது மட்டுமல்ல இரண்டு பேரும் முரண்பட்ட கருத்துக்களோடு எதிர்மேடை கையாளுபவர்கள். இருந்தாலும், நாட்டில் கருத்து வேறுபாடுடையவர்கள் கூடிப் பழகி கருத்துகளைப் பரிமாறிக்கொள்கின்ற நயத்தக்க நாகரிகம் வளரவேண்டுமென்பது நம்முடைய ஆசை. இது ஒருவகை, மற்றொன்று கடந்த இரண்டு ஆண்டுகளாக பெரியாரவர்களுடன் பழகிய நட்புமுறை. தனிப்பட்ட முறையில் பெரியாரவர்கள் மற்றவர்களிடம் காட்டுகின்ற அன்பும், பண்பும், மரியாதையும் என்னைக் கவர்ச்சித்தது. எனவே,

நல்ல நண்பர் என்ற முறையிலும் சமுதாய ஒற்றுமை காணவேண்டும் என்ற முறையிலும் இந்த விழாவில் கலந்து கொள்கின்றேன்.

நாட்டிலே நாளுக்கு ஒரு கட்சி; அவர்களுக்குள்ளே ஆயிரத்தெட்டு சண்டைகள்; அதனல் எந்தவிதமான நல்ல காரியமும் செய்ய முடியாத சூழ்நிலே; அதனலன்றே திருவள்ளுவர் நாட்டிற்கு இலக்கணம் சொல்லும்பொழுது பல்குழு கூடாது என்று சொன்னர். இக் கொள்கையிலே எனக்கு நிறைந்த பற்று உண்டு. தண்தமிழ் நாட்டு மக்கள் பல்வேறு குழுவினராக பிரிந்திருத்தல் கூடாது, ஒருவரோடு ஒருவர் கூடிக் குலவி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு நாட்டிற்கு நல்லன செய்யவேண்டும். நாட்டிற்கு நன்மை என்ற அடிப்படை நியதியிலே எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்ற வேட்கையின் மிகுதியினல் இந்த விழாவில் கலந்து கொள்கிறேன்.

பெரியாரவர்கள் முன்னை நாளிலே தேசீயத் திருப்பணியிலே மிக்கத் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் இன்று எழுபத்தெட்டாம் ஆண்டுத் தொடக்கத்தை எய்துகிருர்கள். ஒரு மனிதன் எழுபத்தைந்து வயதைக் கடந்தால் அவனிடத்தில் ஏதோ ஒரு தனி ஆற்றல் இருந்து இயக்கி வருகிறது என்று சொல்வார்கள். பத்திலும், பதினைந்திலும், முப்பதிலும் மடிகின்றவர்களைக் காண்கின்ற காலத்தில் எழுபத்தெட்டு வயது அடைகின்ற வயதில் தாத்தாவாகவும், எண்ணத்தாலும் ஓடி உழைக்கின்ற உழைப்பாலும் இளைஞராகவும் காட்சி அளிக்கும் பெரியாரைப் பார்க்கின்றபொழுது

நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். (கைதட்டல்) என்னைவிட வயதில் மூத்தவர்களாய் இருந்தாலும் பெரியாரவர்கள் தமிழகத்தில் ஓயாது சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆற்றலை அவருக்குக் கொடுப்பது அவருடைய தன்னம்பிக்கை. அதோடு நம்முடைய நாட்டுமக்களை முன்னேற்றத்திலே அவர்கள் கொண்டிருக்கிற அக்கரை ஓடச் சொல்கிறது; உழைக்கச் சொல்கிறது. பெரியார் அவர்கள் எழுபத்தெட்டாவது ஆண்டை எட்டிப் பிடித்தது குறித்து மகிழ்ச்சி. உடற்கூற்று வல்லுநர் ஒரு மனிதர் நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் வாழலாம் என்று சொல்லுகின்றனர். மறைமலை அடிகள் நூறாண்டுகள் வாழலாம் என்று சொல்லுகின்றார். தாங்கள் மேற்கூறிய இரண்டு எல்லைகளையுமே கடந்து வாழவேண்டும். முடிந்தால் எப்பொழுதுமே எங்களிடம் இருப்பது நல்லது. இந்த சந்தர்ப்பத்தில் பெரியாரவர்களுடைய சேவைகளில் சிலவற்றைச் சிந்துத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த நாடு சுதந்திரப் போராட்டத்தில் தேசீய ஸ்தாபனமாகிய காங்கிரசோடு இருந்து அவர் ஆற்றிய பணி நாடு அறிந்த ஒன்று. அந்த சேவையின் மூலம் மக்கள் அவரை வைக்கம் வீரர் என்று வாழ்த்தினார்கள். சென்ற ஆண்டு நான் தென் திருவிதாங்கூர்ப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்யச் சென்றிருந்தபொழுது வைக்கம் சென்றிருந்தேன். அங்கே சென்றவுடன் வைக்கம் வீரராகிய பெரியாரவர்களின் நினைவு இயல்பாகவே எழுந்தது.

நாட்டைப் பிரித்து ஆட்டிய - நாட்டை நரசக் குழிக்கு அழைத்துச் செல்லக்கூடிய - சாதிப் பேயை

எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். சாதீய முறைக்கு, குலம் கோத்திர சண்டைக்கு, மதம்தான் காரணம் என்று சில நண்பர்கள் - சில பெரியவர்கள் நினைத்தார்கள். நினைத்துக்கொண்டும் இருக்கிருர்கள். நான் ஒரு மதத்தைப் பிரதிபலிக்கின்றவனுக இருப்பதினுல், நான் விரும்பி நாட்டிலே சொல்லி வருகின்ற நால்வர் கண்ட நன்னெறியாகிய மதம் ஜாதீய முறைக்கு முற்றிலும் மாருனது என்று உறுதியாகச் சொல்ல ஆசைப்படுகின்றேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நமக்கு ஜாதீய முறை கூடாது. இன்ன இடத்தில் இன்னுன் நிற்கவேண்டும்; இன்னுர்தான் செருப்புப் போட்டுக் கொள்ளலாம்; இன்னுர்தான் இன்னமொழி படிக்கலாம் என்றெல்லாம் ஒரு போலிச் சாதீய முறை இந்த நாட்டில் உலவிய காலத்தில் துணிந்து எதிர்த்தார்கள். இன்று பாராட்டுகிறவர்களுக்கு தைரியம் இருக்கலாம். ஆனுல், பெரியாரவர்களுக்கு தொடக்கக் காலத்திலிருந்த உறுதியும் தைரியமும் மிகமிகப் பாராட்டுதற்குரியது. எந்தத் தெருவில் யார் போகக் கூடாது கோபுர வாயிலுக்கு அப்பாலே நிற்கவேண்டியவர்கள் - அர்த்த மண்டபத்திற்குள் போகக் கூடியவர்கள் என்றெல்லாம் மதத்தின் பெயரால் ஒரு விதி வைத்துக்கொண்டார்கள். ஆனுல், உண்மையான மதம் இதை ஒத்துக்கொள்ள இல்லை. இந்த ஜாதீய முறையை தகர்த்தெறிய பெரியார் அவர்கள் நாடு முழுவதும் சுற்றினுர்கள். அவர்களுக்கு வாய்ப்பாக தமிழகத்து இளைஞர்களும் உதவியாக இருந்தார்கள். ஆதலால், தமிழ்நாட்டைப் பொருத்த வரையில் ஜாதீய உணர்ச்சி மறைந்து விட்டதென்று சொல்லலாம். ஆனுல், இன்னும் அழிந்துவிடவில்லை. மறைதலுக்கும் அழிதலுக்கும்

நிறைய வேற்றுமை உண்டு. சென்ற ஆண்டிற்கு முன் ஆண்டிலே வட இந்தியாவில் நிலக்கொடை இயக்கத் தந்தை விநோபாபாவேஜீ அவர்கள் ஒரு ஹரிஜன நண்பருடன் கோயிலுக்குள் சென்ற பொழுது தடுக்கப்பட்டார்; இல்லை; தாக்கப்பட்டார். இந்த அளவு கொடிய சாதீயத் தடிப்பு உணர்ச்சி தமிழகத்தில் இல்லை. அப்படிச் சொல்லக்கூட தற்போதைய சூழ்நிலை இடந்தரவில்லை. காரணம், அண்மையில் நடந்த வரகூர் கோவில் நிகழ்ச்சியே ஆகும். பொதுவாக பெரியாரவர்கள் தமிழ் நாட்டில் ஜாதீயமுறைமறைந்தொழிய பெருமுயற்சிஎடுத்துக் கொண்டார்கள். அத்துறையில் அவர்களுக்கு நம் நெஞ்சங் கலந்த நன்றி. அடுத்தபடியாக சமுதாயத்தில் நிறைய ஏற்றத் தாழ்வுகள் - உழைப்பவர்கள் இன்பத்துடன் வாழ முடியாத சூழ்நிலை. உழைப்பவனுடைய உழைப்பாற்றலை தம்முடைய சுகபோக வாழ்விற்கென்று சிலர் பயன் படுத்திக்கொண்டார்கள். ஒருவர் உழைப்பது ஒருவர் உழைப்பிலே மற்றொருவர் உண்பது - இதற்கு ஏதாவது காரணம் காட்டித் தப்பித்துக் கொள்வது என்ற விவாதத்தை தகர்த்தெறிய முயற்சித்தார் பெரியாரவர்கள். திராவிட விவசாயிகள் சங்கம், திராவிடத் தொழிலாளர்கள் சங்கம் முதலிய ஸ்தாபனங்களின் மூலம் சமுதாயத்தில் மண்டிக் கிடந்த ஏற்றத் தாழ்வுகளை அகற்ற முயற்சித்தார். இதற்காகவும் அவர்களுக்கு நம்முடைய நன்றி.

ஒரு நாட்டிற்கு மொழி ஜீவநாடி. ஒரு சமுதாயத்தை அழிக்க வேண்டுமானால் சமுதாய நாகரிகத்தைச் சீர்குலைக்க வேண்டுமானால் அவர்களுடைய மொழியை முதலில் கட்டுப்படுத்தவேண்

டும். பிறமொழி நுழைவு தமிழை அடக்கி ஒடுக்கி அழித்துவிடுமோ என்ற அச்சம் இருந்த காலத்தில் தமிழ்மொழி காப்பிற்காக ஒரு போராட்டத்தைத் தொடங்கினர். அந்தப் போராட்டத்தினாலும், தமிழ்நாட்டிலிருந்த வேறுபல சூழ்நிலைகளினாலும் தமிழ்மொழி காப்பாற்றப்பட்டது. இப்படிக் குறிப்பிடுகிறபொழுது அகில இந்திய தேசீய ஒருமைப்பாட்டைப்பற்றிப் பேசுகின்ற சிலர் தவறான கருத்தைக் கொள்ளலாம். அகில இந்திய தேசீய ஒருமைப்பாடு வேண்டுமென்று சொன்னால் பிராந்திய உறுப்புகள் சிதைய வேண்டுமென்பது அவசியம் இல்லை. ஓர் உருவத்தில் எல்லா உறுப்புகளும் வளமாக இருத்தல் வேண்டும். அதுபோலவே, தமிழ் நன்றாக இருந்தால்தான் தேசீயம் வளமாக இருக்க முடியும். தமிழ்நாடு வளமாக இருந்தால்தான் அகில இந்திய வளம் நன்றாக இருக்கும். தமிழர்கள் நன்றாக இருந்தால்தான் அகில இந்திய ஒருமைப்பாடு வளர்ந்து வளம் பெற முடியும். எனவே, தமிழ்நாட்டில் தமிழைக் காப்பாற்றுவதற்கு—தமிழின்மீது அரியணையமர்ந்து ஆட்சி செய்ய வந்த பிறிதொரு மொழியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார் பெரியார். அந்தத் துறையில் தமிழைக் காப்பாற்றித்தந்த தந்தையாகக் காட்சி அளிக்கின்றார் பெரியார். அதற்காகவும் அவர்களுக்கு நம்முடைய நன்றி.

பொதுவாக, நாட்டிலே ஏதோ வடக்கு, தெற்கு என்ற பேச்சு உலவிவருகிறது. இதன் அடிப்படையிலே ஏதாவது சில உண்மைகளும் இருக்கக் கூடும். அரசியல், பொருளாதாரம், ஆகியவற்றைத் தொட்டு நான் எதுவும் பேச ஆசைப்பட

வில்லை. ஆனால், இலக்கியம், சமயம், நாகரிகம் ஆகிய துறைகளில் வடக்கு, தெற்கு என்ற எண்ணம் வளருவதற்கு வாய்ப்பளிக்கப் பெறுகிறது. உலகு புகழ் ஒருமறை தந்த திருவள்ளுவர் வட அரங்கிலே பாராட்டப்படுவதில்லை. தென்னகத்தில் பிறந்து ஞானங்கண்ட பெருமக்களைப்பற்றி வட அரங்கு மௌனம் சாதிப்பதே மரபாக இருந்து வருகிறது. தென்னகத்தில் வாழ்கிற மக்களை கருத்தில் குருடராக நினைத்து அங்கிருந்தே கருத்துக்களை இறக்குமதி செய்கின்ற செயல்முறை நாடறிந்ததொன்று. சில ஆண்டுகளுக்கு முன் வரையில், வரலாற்றுப் புத்தகங்களில் திருவள்ளுவரையோ — திருநாவுக்கரசரையோ படித்துத் தெரிந்துகொள்ள முடியாத நிலை. இங்கு மட்டுமா? வேங்கடத்திற்கு அப்பால் அவர்களை வாழ்த்தினவர்கள் அரிதினும் அரிது. தன்னாடு—தன்மொழி என்ற உணர்ச்சி கடந்த சில ஆண்டுகளாக வளர்ந்துவந்தமையினால் இந்த நாட்டு ஞானிகளையும், பெருமக்களையும் வாழ்த்தும் நிலை வளர்ந்திருக்கிறது. இத்துறையில் அவர்களுக்கு நம் நன்றி.

அடுத்தபடியாக பெரியாரவர்களுக்கும் எனக்கும் மாறுபடுகின்ற சில கொள்கைகள், இக்கொள்கைகள் சம்பந்தமான விவாதங்கள் தனிப்பட்ட முறையில் பறிமாறிக்கொள்ளப்பெற்று, வரையறுத்த முடிவிற்கு வந்தபிறகு பொதுமக்கள் முன் வைப்பதே முறையாகும். சாதாரணப் பொது மேடைக்குரிய பிரச்னையல்ல. ஆனால், ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். பெரியாரவர்களை எதிர்த்துப் பேசுகிற சாதீய முறை, சமூக ஏற்றத்தாழ்வு முதலியனவற்றிற்கு மதம் காரணம் இல்லையென்பதேயாகும்.

மதத்தை சார்ந்ததாகச் சொல்லப்பெறும் பிற்கால ஏடுகள் சிலவற்றில் வேண்டுமானுல் இதற்கு ஆதாரம் இருக்கலாமோ என்னமோ? நடிகர் ராதா சொன்னதுபோல எதிர்காலத்தில் எங்கள் இருவருக்குமிடையே ஏதாவது ஒருமித்த ஒரு கொள்கை உருவாகுமானுல் தமிழகத்திற்கு அது நல்ல எதிர்காலத்தைக் கொடுக்கும்.

எனவே, தமிழ்நாடு முழுதும் பரவிக்கிடக்கின்ற தமிழர்களின் சார்பாக, தமிழர்களிடையே இருந்த சாதீய முறையை ஒழிப்பதற்காக, தமிழர்களிடையே மண்டிக்கிடந்த சமூக ஏற்றத்தாழ்வுகளே அகற்றுவதற்காக, தமிழனுடைய தன்னேரில்லாத தமிழ் மொழியை காப்பாற்றுவதற்காக, பாடுபட்ட பெரியாரவர்களுக்கு நன்றி காட்டி வாழ்த்துகின்றேன். பெரியாரவர்கள் எழுபத்தெட்டாண்டுகளே எட்டிப் பிடித்துவிட்டார். வயதாலும் அனுபவத்தாலும் மூப்பெய்தி இருக்கிருர். கடந்தகால அனுபவங்களின் மூலம் நாட்டினுடைய போக்கை நன்ருகப் புரிந்துகொண்டிருப்பார்கள். தமிழர்கள் ஓர்குல உணர்ச்சியுடன்—ஓரினப் பாசத்துடன் வளர்ந்து, அவர்களுடைய மொழியையும், மொழிவழிப்பட்ட நாகரிகத்தையும் காப்பாற்றிக்கொண்டு வாழ முயற்சிப்பார்கள். அந்த முயற்சிக்கு பெரியாரவர்களுடைய ஆதரவு இருக்குமென்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அளவில் தலைவர் முன்னுரையை முடித்துக்கொள்ள விரும்புகின்றேன். மீண்டும் நாங்கள் பெற்ற பெருஞ் செல்வமாக—தமிழ் நாட்டிற்கு ஒரு தனித்த வைப்பாக—தமிழர்களுடைய வாழ்விற்கு ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் பெரியாரவர்கள் வாழ்க

என வாழ்த்தி, அவர்களுடைய நாடு, இனம், மொழி, மொழிவழிவந்த நாகரிகம் ஆகிய இவைகளி டத்தில் பற்றும், அவைகளை வளர்க்கும் திருப்பணி யில் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(அடுத்து, தெ. பொ. வேதாசலம் அவர்கள் பேசினார்கள். அவர் பேசும் பொழுது "மதம் மக்களுக்கு ஏதும் செய்யவில்லை யென்றும், மதம் ஒரு ஜாதி ஆதிக்கத்திற்கு உட்பட்ட தென்றும் சில குற்றச்சாட்டுகளை மதத்தின்மீது சுமத்தினர். அடுத்து, அடிகளார் பேசும் பொழுது, தெ. பொ. வேதாசலம் கூறிய குற்றச் சாட்டுகளுக்கு மறுமொழி கூறினார்கள்.)

அன்புக்கும் பாராட்டுதலுக்கும் உரிய பெரியார் அவர்களுடைய பிறந்த நாளுக்கு விடுதலை இதழுக்கு ஓர் செய்தி அனுப்பி இருந்தோம். அந்தச் செய்தி யைப் பெரியாரவர்கள் தனியே அச்சடித்து இங்கே கொண்டு வந்துள்ளார்கள். அன்பர் வேதாசலம் சொன்ன கருத்துக்கள் அனைத்தையும்,என்னுடைய வாழ்த்துரை விளக்குவனவாக அமைந்திருக்கிறது.

'சர்ச் மதம் வேறு; பைபிள் மதம் வேறு' என்று ஒரு அறிஞன் சொன்னான். அது போலவே, தமிழ் நாட்டிலும் கோவில் மதம் வேறு; மக்கள் மதம் வேறு என்று சொல்லலாம். தெ. பொ. வேதா சலம் அவர்கள் சர்ச் மதத்தையே பிடித்துக்கொண் டிருக்கிறார்கள்; பைபிள் மதத்தைப் பிடித்துக் கொள்ள இல்லை என்று சொல்ல ஆசைப்படு கிறேன்.

மதம் ஒரு பொழுதும் மனித இனத்தைத் தாழ்த்தியது இல்லை. மதத்தைச் சார்ந்த ஒரு சிலர் தாழ்த்த முயற்சித்தார்கள். இங்கே, நம்முடைய தாக்குதலுக்கு ஆளாக வேண்டியவர்கள் மதத்தைச் சார்ந்த சிலரே யொழிய மதம் இல்லை. செங்குருதி சொட்ட சிலுவையில் தொங்கிய இயேசு பெருமானிடத்திலிருந்து கிறிஸ்துவ மதம் தொடங்கியது. அறியாமல் செய்கின்றார்கள் மன்னித்து விடுக என்ற கருணை உரையிலிருந்து இயேசு மதம் எழுந்தது. அதை, ரசுபுடீனுடைய செயலோடு ஒப்பிட்டுப் பார்த்து விமரிசனம் செய்வது முறையல்ல. ரசுபுடீனுடைய மதம் கிறிஸ்துவ மதம் என்றும் சொல்லக்கூடாது. சிலுவையில் தொங்கிய பெருமானுடைய கருத்துத்தான் கிறிஸ்துவ மதம். ரசுபுடீன் அதைக் கொலை செய்துவிட்டார். ரசுபுடீன் தாக்குதலுக்கு உரிவர் ஆனால், கிருஸ்துவ மதம் தாக்குதலுக்கு உரியது இல்லை என்பதை மறந்து விடக்கூடாது.

நாட்டில் பஞ்சம் வந்தபொழுது மதம் என்ன செய்தது என்று கேட்டார்கள். ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பஞ்சம் பரவியது. அப்போது தமிழ் நாட்டில் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞான சம்பந்தரும், தேசம் உய்யவந்த திருநாவுக்கரசரும் திருவீழிமிழலை திருக்கோயில் கொண்டருளிய இறைவன்மீது பதிகம் பாடி இறைவனிடத்தில் படிக்காசு பெற்று பஞ்சம் நீக்கினர். எனவே, அவ்வப்பொழுது மதத்தின் தத்துவம் தலையாய தலைவர்களால் செயல்படுத்தப்பட்டது. பரவலாகவும் தொடர்ச்சியாகவும் மதத்தைச் சார்ந்தவர்கள் செயல்படாமல் இருந்திருக்கலாம். இக்

கருத்தை பெரியாரவர்களிடத்தில் நான் சொல்லியும் இருக்கிறேன். மதத்தைச் சார்ந்த தத்துவம் வேறு; தத்துவத்தைச் செயல்படுத்துகிறவர்கள் வேறு; செயல்படுத்துகின்றவர்களுடைய தவறை தத்துவத் தோடு இணைத்தும் பிணைத்தும் குழப்பிவிடக் கூடாது. பெரியாரவர்களுடைய தன்மான இயக்கம் (திராவிட கழகம்) கழகத்தைச் சேர்ந்த யாரோ ஒருவர் செய்கிற தவறு, கழகத்தையோ தலைவர் பெரியாரையோ, தாக்குதலுக்கு உட்படுத்துவது வரம்பு இல்லை; முறையுமல்ல. ஒவ்வொரு இயக் கத்திற்கும் கருத்திற்கும் எல்லோரும் அளவு கருவிகளாகிவிட மாட்டார்கள். அளவுகோலாக அமைகின்றவர்கள் அல்லர் ஒரு சிலரேயாம். அதுபோல, தென்னகத்தின் தனி நெறியாம் சிவ நெறியை அளந்து பார்க்கும்பொழுது திருநாவுக் கரசரை வைத்து அளந்து பார்க்க வேண்டும். விவிலிய மதத்தை இயேசு பெருமானை வைத்து அளந்து பார்க்க வேண்டும். இஸ்லாம் மதத்தை நபிகள் நாயகத்தை வைத்து அளந்து பார்க்க வேண்டும். அப்படியல்லாது ரசுபுடீனையோ, மகமது கஜினியையோ வேறு சிலரையோ மதத்தை அளந்து பார்க்கின்ற அளவு கருவிகளாகக்கொள்ளு தல் கூடாது. மதம் தவறு செய்யாது. தவறு செய் யத்தூண்டாது. தவறு செய்கின்ற வாய்ப்பு அதற்கு இல்லை. உலகியல் சார்பின் மிகுதியால் மதத்தைச் சார்ந்தவர் தவறு செய்தால் அங்கே திருத்தம் காண முயற்சித்தல் வேண்டும். அன்பியலின் அடிப்படை யில் திருத்தம் காணப்பெறுதல் வேண்டும். ஆனால், மத வெறுப்பு இயக்கம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. இதை ஒட்டிய கருத்துக்களை அதிகமாகச் சொல்ல தற்போதைய காலம் இடந்தரவில்லை.

மேனுட்டு மதத்திற்கும் நம் நாட்டு மதத்திற்கும் நிறைய வேறுபாடு உண்டு. மேலே நாட்டு மதம் அரசியலுடன் பெரும்பாலும் ஒன்ருக இணைந்து கிடந்தது. ஒருகால் தமிழ் நாட்டு மதம் அரசியலை அணைந்து இருக்கலாமோ என்னமோ? வரையறுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லை. ஆனால், நிச்சயமாக அரசியலால் நம்முடைய மதம் ஆட்டிப் படைக்கக்கூடியதாக இருந்ததில்லை. அதுபோலவே, பெரும்பாலும் மதம் அரசியலில்புகுந்து குழப்பத்தை உண்டாக்கியதும் இல்லை. கம்யூனிசத் தத்துவக் கர்த்தாக்களுக்கு மதத்தின்மீது அவநம்பிக்கை எழுந்த காரணம் ஜாரினுடைய கொடுங்கோன்மைக்கு-ஜாரினுடைய ரத்தக்குடிப்பு இயக்கத்திற்கு-ரசுபுடீனும்-ரசுபுடீனுடைய சர்ச்சும் ஆதரவாயிருந்ததேயாகும். அதுபோலவே, திராவிடக் கழகத்திற்கும், பெரியாரவர்களுக்கும் மதத்தின் மீது வெறுப்பிருக்க முடியுமென்று நான் நம்பவில்லை. எனவே, மதத்தின் பெயரிலே மேற்பரப்பிலே இருக்கின்ற குப்பை கூளங்களைக் கூட்டிவிட்டால் அடிப்படையிலே இருக்கிற நல்லனவற்றைக் காண முடியும். அப்படிக் காண வேண்டுமென்பதே என்னுடைய ஆசை.

பெரியாரவர்களின் சாதீய முறை ஒழிப்புப் போராட்டத்திலே எவ்வளவு தீவிரமாகச்செயல்படச் சொன்னலும் அப்படியே செய்யச் சாத்தியமாக இருக்கிரும். சமூகப் புனர்நிர்மாணத் திருப்பணியிலே ஏழ்மை போக வேண்டும், வறுமை போக வேண்டும், எச்சிலை எடுத்து தின்று கொண்டு பிளாட்பாரம் குடியிருப்பாக பலர் இருக்கின்ற நிலை மாறவேண்டும் என்பன போன்ற திருப்பணிகளிலே,

தந்தையும் தாயுமாகிய ஆண்டவன் பெயரால் முழுமூச்சுடன் ஈடுபடத் தயாராயிருக்கிறோம்.

இந்த விழாவிலே நான் கலந்து கொள்கிறேன் என்றால் பலர் ஆச்சரியப்படுவார்கள். பெரியார் பிறந்ததின விழாவிற்குச் சிலர் கண்டனங்களையும் எழுப்பலாம் இந்தக் கண்டன மனப்பான்மையை நான் வெறுக்கிறேன். மனிதத் தன்மைக்கும் மேம் பட்டதாக மதம் இருத்தல் வேண்டும். மனிதத்தன் மைக்கும் தகுதி குறைந்ததாக சமயம் வந்துவிடுதல் கூடாது.

திருவானைக்காக் கோயில் நிகழ்ச்சிகளைப்பற்றி வேதாசலம் அவர்கள் சொன்னார்கள். திருவானைக்கா கோயில் நிகழ்ச்சி முறைகள் எப்படியென்று நமக்குத் தெரியாது. பொதுவாக, தமிழ்நாட்டுக் கோயில் களிலே வழிபாடு செய்கின்றவர்கள் சைவசித்தாந்த நெறிமுறையை யொட்டிய சைவர்களாக இருக்க வேண்டும். திருக்கோயிலில் படைக்கப்பெறுகின்ற நிவேதனப் பொருள்கள் இன்ன சாதியினர்தான் உண்ணவேண்டும் என்ற முறை இருப்பது சரி யல்ல. மாற்றப்பட வேண்டியதுங்கூட சமுதாய புனர்நிர்மாணத் திருப்பணிகளுக்கு சமயம் ஒரு போதும் குறுக்கீடாக நிற்காது. நான் விரும்பி வாழ்த்துகின்ற சிவநெறி அப்பரடிகளுடைய சமய நெறி–நன்மை பெருகு அருள்நெறி சமுதாயப் புணர்நிர்மாணத் திருப்பணிக்கு சமரச சமதர்ம சமுதாயத்தைக் காண்பதற்கு,ஆதரவாக அரவணைப் பாக இருக்கிறது. இனியும் இருக்கும் என்ற உறுதி யைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(அடுத்து, பெரியார் ஈ. வே. இராமசாமி நாயக்க ரவர்கள் பதில் கூறும் முறையில் சில நிமிடங் கள் பேசினுர்கள்.)

மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய அடிக ளார் அவர்களுக்கும், இங்கு கூடியுள்ள மற்ற தாய் மார்களுக்கும், அருமைத் தோழர்களுக்கும் எனது மனமுவந்த நன்றி.

இன்றைய தினம் எனக்கு இங்கே பொற்பதக் கம்—என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு அளிக் கப்பட்டது. பொன்னுடை என்னும் பெயரால் புத்த பெருமானுடைய உருவம் தாங்கிய இந்த ஆடையை எனக்கு அளிக்கப்பட்டது மிகமிகப் பெருமை அளிக்கக்கூடியது, நல்ல லாபம் அளிக்கக் கூடியது.

அடிகளார் அவர்கள் அருள் கூர்ந்து அனுமதி அளித்தபடி சற்று உட்கார்ந்துகொண்டு பேசு கிறேன். பிறந்தநாள் விழாவின்பேரால் எனக்கு ஏற்பட்ட பெரிய பெருமையும் லாபமும் இந்தப் பதக்கமும் ஆடையும் என்று சொன்னேன். அது இரண்டாவது. முதலாவதாக அடிகளார் அவர்களு டைய தலைமையில் இவ்விதம் கொண்டாடும் பேறு எனக்கும், என்னுடைய கழகத்திற்கும், எனது நண் பர்களுக்கும் கிடைத்த பேறு என்றே மனப்பூர்வ மாகக் கருதுகிறேன்.

அடிகளாருக்கும் எனக்கும் ஏதாவது கருத்து வேற்றுமை இருக்கக்கூடும் என்று பொதுமக்கள் பலர் கருதுகிருர்கள். அதிலே அடிகளாரைப் பின் பற்றுகிறவர்களும் அப்படியே சற்று ஏறக்குறைய

727 dt 24.11.77.



என்னைப் பின்பற்றக்கூடியவர்களிலும் பலர் அப்படியே கருதுகிறார்கள்.

உண்மையிலே எங்கள் இருவருக்கும் கருத்து வேற்றுமை இருக்கவேண்டிய அவசியமில்லை. அதை முதலாவது நினைத்துக்கொண்டால்தான் பின்னாலே சொல்வது விளங்கும். அடிகளார் தனக்கென வாழாதவர். அவருக்காகச் சொந்தத்தில் ஆகவேண்டிய காரியம் ஒன்றும் இல்லை. தொண்டின் உருவமாக விளங்குகிறவர். அதுபோலவே தொண்டனென்று வேஷம் போட்டுக்கொண்டிருக்கின்ற நான் கடுகளவாவது மாறுதல் கொள்ளக் காரணம் இல்லை. எனக்குத் தெரியும் பொதுத்தொண்டின் தன்மை இன்னது என்று.

அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்கள் ஒரு மாச காலமாக நான் பட்டபாடு என்று. உண்மை, உண்மை. எவ்வளவு தைரியமிருந்தால் இங்கு இன்று வந்திருக்க முடியுமென்று நீங்கள் சிந்தித்தால் நமக்குக் கிடைத்த பேறு எவ்வளவு அரிது என்று நீங்கள் உணர்வீர்கள்.

ஏன்? நண்பர் ராதா அவர்கள் பேசியபோது நாத்தீகரும் ஆஸ்தீகரும் ஒன்று சேர்ந்தார்கள் என்று. வாஸ்தவம், நம் நாட்டிலே மக்களுக்கு ஆஸ்தீகம் என்றால் என்ன? நாஸ்தீகம் என்றால் என்ன? என்று புரியாது. எது ஆஸ்தீகம் என்றால் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கூறுகிறவர். நாஸ்தீகர் என்றால் கடவுள் இல்லை என்று கருதி இருக்கிறவர் என்று பொருள் மக்களிடையே பரவி

இருக்கிறது. என்னைப் பொருத்தவரையிலும் நான் கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன் அல்ல. நான் உண்மையாகச் சொல்லுகிறேன். உண்மை யாகவே ஏன் ஏன் என்று கேளுங்கள். சாமிகள் சிரித்தார்கள் நான் ஏதோ சாமர்த்தியமாகச் சொல்லுகிறேன் என்று. என்னுல் கடவுளைப் புரிந்துகொள்ள இன்றைக்கும் முடியவில்லை. அது என்ன ? எப்படிப்பட்டது ? என்பதைப் புரிந்து கொள்ள என்னுலே முடியவில்லை. அதைத் தவிர புரிந்து கொண்டிருக்கிறதாகக் கருதுபவர் களிடத்தில் நான் ஏன் சண்டைக்குப் போக வேண்டும். நீங்கள் நன்ருக நினைக்கவேண்டும். கடவுளைப் பற்றிப் புரிந்து கொண்டிருப்பதாக நினைத்து, கடவுளிடத்தில் பக்தி செலுத்துகிறவர் களிடத்தில் எனக்கு ஏன் சண்டை வேண்டும். நானும் என்ன ? ஏதோ நான் செய்கிற தொண்டில் கடவுளைப் பற்றிச் செய்தி வருமானுல் "கடவுளைப் பற்றிய சேதி" அல்ல. கடவுள்களைப்பற்றிய சேதி. ஏராளமான கடவுள்களை உண்டாக்கி வைத்து விட்டார்கள்: கடவுளாலே குற்றமில்லை என்ருலும் அந்தக் கடவுளாலே மக்களைத் தவருமல் நடத்தும் படி, நடக்கும்படி செய்வதற்கும் அவைகளுக்குச் சக்தி இல்லாமல் போய்விட்டது. வீணுக ஏன்? மக்கள் போலிக் கடவுள்களிடத்திலே சீரழிகிருர் கள் என்றுதான் என்னுடைய கவலை. உள்ளபடி மற்றபடி கிறித்துவர்களைப் பற்றியோ மகம்மதியர் களைப்பற்றியோ அவர்களிடத்திலே போய் கடவுள் போராட்டம் செய்வதே இல்லை. நம்மவரார்கள் ஏராளமாகக் கடவுள்களை வைத்துக்கொண்டிருக் கிருர்கள். ஏதேதோ அதைப்பற்றிப் பேச இது மேடையல்ல. ஏனென்ருல் நான் கடவுள் இல்லை

என்று சொல்லுகிறவனல்ல. நாஸ்திகன் என்று சொல்லி அப்படிக் கருதிக்கொண்டிருக்கிருர்கள். என்ருலும், நான் என்ஃனப் பொருத்தவரையும் நான் நாஸ்திகன் என்றே தைரியமாய்ச் சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் நன்ருய்த் தெரிந்துகொள்ள வேண்டும் நாஸ்திகன் என்ற சொல்லுக்குக் கடவுள் இல்ஃல என்ற பொருள் இல்ஃல. அந்தப் பொருளில் பயன் படுத்துகிருர்கள். நாஸ்திகன் என்ற சொல்ஃல வட மொழி ஆதாரங்களிலே நான் பார்த்தபடி சொல்லு கிறேன். நாஸ்திகன் என்ருல் புராண இதிகாசங் கஃள வேதங்கஃள சாஸ்திரத் தத்துவங்கஃள பகுத் தறிவிஞலே விவகாரம் பண்ணுகிறவன், அதுதான். அது இராமாயணத்திலும்கூட நான் நன்ருகப் பார்த் திருக்கிறேன். இராமன் வாக்கிஞலேயே வால்மீகி எழுதுகிருர். மற்ற புத்தகங்களிலும் சிலவற்றில் நான் பார்த்திருக்கிறேன். அவ்வளவுதானே தவிர இதற்கு கடவுஃளக்கொண்டுவந்து அங்கு சம்பந்தப் படுத்தவே இல்ஃல. அது இந்த ஆரியமத சம்பந்த மான புராண இதிகாசம் முதலியவைகள் நம்முடைய மக்கள் அறிஞர்களுடைய ஆராய்ச்சிக்குப் பெரிதும் கலக்கத்தை உண்டாக்குகிறது பலருக்கு. மகிழ்ச்சி யைக்கூட உண்டாக்குகிறது. அதனிடத்திலே இருக்கிற போராட்டம் இன்று நேற்று ஏற்பட்ட போராட்டமல்ல. அதற்காக வேண்டியே ஆரியர் கள் வடமொழியிலே யாரொருவர் தங்களுடைய ஆதாரங்களிலே கைவைக்கிருர்களோ அவர்கஃள நாத்திகர் என்று சொல்லிவிட்டார்கள். அவ்வளவு தானே தவிர இராவணனும் நாத்திகன் இரணிய னும் நாத்திகன். அந்தப் புராணங்களிலே வருகிற

வார்த்தையைப் பார்த்தால் இராவணன் நாத்திகன் அல்ல. அவன் சிவபெருமானை எத்தனையோ வருஷகாலம் தவம்செய்து வரம்பெற்றவன். அவனை நாத்திகன் என்று சொல்ல வேண்டியதில்லை. இரணியனையும் நாத்திகன் என்று சொல்லவேண்டியதில்லை. எத்தனையோகாலம் கடவுளைத் தவம்செய்து வரம்பெற்றவன் அந்தப் புராணப்படிக்கு. ஆனால், ஏன் அவனை அவர்கள் நாத்திகன் என்று சொல்லிவிட்டார்கள் என்றால், அவனும் ஆரிய மதசம்பந்தமான காவியங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனதினால், நாத்திகம் என்ற பொருளினாலே கடவுள் இல்லை யென்று ஏன் மறுக்கிறார்கள். கடவுளை எதிர்ப்பிரசாரம் செய்கிறார்கள் என்கிற பொருளிலே இல்லை அது சாதாரணம். ஆகையினால் அது ஒரு காரணமல்ல. நண்பர் ராதா அவர்கள் சொன்னது போல அடிகளாரிடத்திலே கருத்து வேற்றுமைக்கு என்ன இருக்கிறது ? மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றுகிறவர் அடிகளார். நானும் அந்தப் பெயரைத்தான் சொல்லிக்கொள்கிறவன் (தொண்டாற்றுகிறவன் என்று) மனித சமுதாயத்திற்கு இருக்கிற குறைபாடுகளை நீக்கவேண்டுமென்பது அடிகளாருடைய அருள். நானும் அதைத்தான் சொல்லிக்கொள்கிறேன். ஒரு வியாதிக்கு பல வைத்தியங்கள் உண்டு. ஆங்கில வைத்தியத்திலேயே ஹோமியோபதி, அலோபதி என்கிறார்கள். மற்ற நாட்டு வைத்தியத்திலே சித்த வைத்தியம், ஆயுர்வேதம் என்று சொல்லுகிறார்கள். இஸ்லாத்திலும் யுனானி என்றும் என்னென்னமோ சொல்லுகிறார்கள். இப்படிப் பல இருக்கின்றன. இருக்கலாம். இதிலே ஏதாவது பணத்திற்காக, சுயநலத்திற்காக ஆசைப்பட்டுச் சொல்வதாக இருந்தால் அது தப்பு

இந்த வழிதான் சரியென்று சொல்லவேண்டும். இல்லாவிட்டால், அந்த வழிதான் என்று ஏதோ போய்க்கொண்டிருக்கிற வழியிலே இது என்ன என்று தெரிந்துவிட்டால் பிறகு கருத்து வேற்றுமை ஏற்படுவதற்கு இடமில்லை. ஆனதினுலே நான் கொஞ்ச காலமாகவே அடிகளாரிடத்தில் கருத்து வேற்றுமை அற்றவனுகவே இருக்கிறேன். நான் மாத்திரமல்ல என்னுடைய நண்பர்களுடைய உள்ளத்திலேயும். பெரும்பாலும், நண்பர் வேதாசலம் பேசினுர்கள் அதை நான் அப்படியே ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் அது எந்த முறையிலே பேசினுர் - அடிகளார் அதை எந்த முறையிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறே னென்ருல் - குறைபாடுகளை அடிகளாரிடத்திலே தெரிவிக்கிருேம் - எடுத்துச் சொன்னேம் இன்ன குறைகள் இருக்கின்றன என்று. அது இருக்கிறது என்று கருதினுல் பரிகாரத்திற்கு அருள் செய்யவேண்டும். இல்லையானுல் சரி அதில் ஒன்றும் தவறில்லை. வேறு ஒன்றுமே இல்லை. மதத்தின் பேரில் குற்றமில்லை என்ருர்கள் ரொம்பசரி. மதத்தின் பேரில் குற்றமில்லை மதத்தைச் சார்ந்தவர்கள் பேரில் குற்றம் என்று. ரொம்பசரி. சார்ந்தவர்களை எதுதான் திருத்துகிறது? சார்ந்தவர்கள் எப்பத்தான் திருந்துகிறது? அடிகளாரைப்போல வந்தால்தான் அது திருந்த முடியும். எனக்குத் தெரியும் அது. மதத்தையும் மற்றக் காரணங்களையும் மாற்றி அமைக்கவேண்டும். அதைத் திருத்தவேண்டும் என்கிற எண்ணத்திலேதான், தவிரவும் இயல்பை அனுசரித்துச் சொல்லுகிறேன். சில காலத்திற்கு ஏற்றபடி மாறவேண்டும். ரொம்ப நல்லவர்தான் இயேசு. நான் இல்லை

என்று சொல்லவில்லை. அந்தக் கன்னத்தில் அறைந் தால் இந்தக்கன்னத்தைக் காட்டு என்று சொன்னார். முடியுமா? மேல் வேட்டியைக் கேட்டால் இடுப்பு வேட்டியைக் கொடு. இன்று முடியுமா? எல்லாரும் நிர்வாணமாகத்தான் இருக்க நேரிடும். அவர்கள் அதிலே எந்தக் கருத்திலே எவ்வளவு நன்மை யான உணர்ச்சியிலே சொன்னார் அதுதான் மதம். ஆனால், அதில் சில காலப்போக்கிற்குக் கொஞ்சம் இடையூறாக இருக்க நேரும் அதைத் திருத்தலாம். முடியாதது என்றல்ல.

குறைபாடுகளை எடுத்து முறையிட்டதுதான் அதை அடிகளார் நல்ல உண்மை உணர்வார்கள். மற்றபடி அடிகளார் போன்றவர்கள் இது போன்ற கூட்டங்களுக்கு வந்து ஆசி கூறுவது உள்ளபடியே நாம் பெறற்கரிய பேறு. உள்ளபடியே நான், இந்த பிறந்தநாள், வருஷத்திலே இரண்டுமூன்று தடவை யாவது வரக்கூடாதா என்று எண்ணுகிறேன். என்ன பண்ணட்டும்? அவ்வளவு பெருமை இருக்கு. இரண்டு மூன்று தடவை வந்தால் நான் எவ்வளவு இன்பம் பெறுவேன். பவுனுக்காகவே அல்ல. இரண்டு மூன்று தடவை வந்தால் அது பெரிதல்ல. அடிகளாரைப் போன்றவகளுடைய ஆசி - நான் பல இடங்களிலே ஆசியைப் பற்றி பேசி இருக்கிறேன். நான் ஆசியைப்பற்றி நம்புகிறவனல்ல. நீங்கள் நன்றாக நினைத்துக்கொள்ள வேண்டியது திடீ ரென்று கருத்துக்கு வந்துவிடாதீர்கள். நான் ஆசியை நம்புகிறவனல்ல. ஏன் நம்புகிறதில்லை என்றால் ஆசியைவிட வசவுதான் நிறையவருகிறது. இதை நம்பினால் நான் ஒரு வேலைக்கும் போக முடி யாது. வசவைப் பார்த்தால் அதுதான் ஆசியும்

வசவும் ஒண்ணுதான். ஆனுல் ஆசிக்கு மரியாதை இல்லையா ? ஆசிக்கு சத்து இல்லையா என்று கேட்பீர்கள். உண்டு. அடிகளார் போன்றவர்களுடைய ஆசிக்கு கட்டாயம் மரியாதை உண்டு (கைதட்டல்). எல்லாருடைய ஆசிக்கும் மரியாதை இருக்குமென்று சொல்லுவதற்கில்லை. அடிகளார் போன்றவர்களுடைய ஆசிக்கு கண்டிப்பாக பலன் உண்டு. நான் இருக்கிறேன் என்னிடத்திலே இருக்கிற ஒரு சிறுவனைப் பார்த்து நான் "ஏ - நீ நல்ல பையன் அப்படி என்று நீ நல்லா படிப்பாய் - நீ நல்லா பாஸ் பண்ணனும் என்றெல்லாம் நான் சொல்லிவிட்டேனுல் என்னிடத்தில் இருக்கிற பையனை நான் சொன்ன வாக்கு நிறைவேறத் தகுந்த உண்மையில் என்னுல் ஆன உதவி நான்அவனுக்கு செய்து வருவேன். இல்லாவிட்டால் ஐயா சொன்னது பலன் இல்லாது போயிற்று என்பான். என்னிடத்திலே இருக்கிறதிலே முடியும் நான் சொன்னபடி. வேண்டிய நலனை செய்து அதே மாதிரி ஒரு பெரிய அதிகாரி அடுத்தாற்போல் இருக்கிற ஒருவனை அந்த பெரிய அதிகாரி பார்த்து ஒரு ஆசி சொன்னுரேயானுல் கட்டாயம் அவர் அதற்குத் தகுந்த காரியம் செய்ய தகுந்த செளகர்யம் உள்ளவர். செய்யாவிட்டாலும் அந்தப் பலனை அடைய உரிமையுடையவர்கள் அவர்கள் வாயாலே வந்துவிட்டதினுலேயே அவனுக்கு ஏதாவது பலனுண்டு.

கொஞ்ச நாளைக்கு முன்னுல் கோயம்புத்தூரிலே ஒரு பிள்ளையாண்டானுக்கு திருமணம் ஆயிற்று. அதற்கு அவர் எனக்கு சிற்றுண்டி விருந்து நடத்தினுர். நடந்தவுடனே "பெரியாருடைய ஆசிக்காகத்தான் இந்தக் காரியத்தைச் செய்தேன் என்று

அவர் சொன்னார். அவர் கோவாப்ரேடிவ் இலாகாவிலே ஒரு கிளார்க். அதற்குத் தலைவர் நம்முடைய காலஞ்சென்ற ரத்தினசபாபதி முதலியார். நான் "ஆசிக்காகத்தான்" என்று அந்த பிள்ளையாண்டான் சொன்னவுடனேயே சொன்னேன், "என்னுடைய ஆசி என்று சொல்வது சும்மா. சம்பிரதாயத்திற்காகத்தான். ரத்தினசாமி முதலியாருடைய ஆசி உனக்கு வந்தால் ஏதாவது அவரிடம் நடக்கும். கண்டிப்பாக நீ அதிலே பலன் அனுபவிக்கலாம்" என்று சொன்னேன். "அதையும் தான் எதிர்பார்த்தேன்" என்று சொன்னான். ரத்தினசபாபதி முதலியார் எழுந்திருந்து சொன்னார் அவன் என்கிட்ட இருக்கிறதினாலே என்னிடம் ஆசியைக் கேட்டார். நானே செய்ய முடியும் பலபேரு இருக்கிருங்க. அவங்க உரிமையைப் பார்த்து அவனுக்கு ஏதாவது செய்யக்கூடும் என்று தன்பேரில் பொருப்பற்றுப்போச்சு என்று சமாதானம் சொல்ல வந்தார். எதுக்கு நான் சொல்லுகிறேன்—ஆசியை பொருப்புள்ளவர்கள்—ஆசிக்கு உதவி செய்யக்கூடிய சக்தியுடையவர்கள் செய்கிற ஆசி கட்டாயம் அது பலன் பெற்றுத்தான்தீரும். அடிகளாருடைய ஆசி கண்டிப்பாய் பலன் ஏற்படும். ஆனதினாலே நம்முடைய இயக்கத்தைப்பற்றி—கொள்கைகளைப்பற்றி — தொண்டைப்பற்றி சிறப்பித்துச் சொன்னதின்மூலம் அடிகளாரைப் பின்பற்றுகிற எவ்வளவோ பேர் இன்னும் மக்கள் நியாயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற எத்தனையோபேர் உடனே மனம் திரும்புவார்கள். அடிகளாரே எடுத்துச் சொல்லியிருக்கிறார்—அதில் தவறு இருக்காது. ஆனதினாலே அவர்களுடைய தொண்டுக்கு நம்மாலான உதவி செய்யவேண்டும்.

நம்மாலான அளவு மதிக்கவேண்டும் என்கிற நிலைமை எல்லாம் வரவேண்டும். அது அந்த ஆசி உண்மையாகவே—நல்ல—பெருத்த ஆசி தான். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மற்ற படி நம்மவர்களுக்கும் கொஞ்சம் ஏதாவது இருக்கும். இன்றையதினம் சாமியைப் பார்த்தவுடனே ஏதோ இவன் அடியோடு பக்தனாகிவிட்டான் என்று கை விடுவார்கள் என்னை வெகுபேர். அப்படி நீங்கள் ஒருத்தரும் கருதக்கூடாது. உதாரணமாக உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் பத்து இருபது வருடகாலமாகவே, உங்களுக்குத் தெரியும், காங்கிரசைப் பொருத்தவரை நான் மாறுபாடான கருத்துக்கொண்டவன். பல துறைகளிலே கண்டித்து வருகிறவன். பல துறைகளிலே நமக்கு ஆகவேண்டிய காரியம் பல இருக்கின்றன. இது காங்கிரசினுடைய அடிப்படையே உத்தியோகந்தான் என்கிறதெல்லாம் பார்ப்பனனுடைய நலனுக்காகத் தான். வடநாட்டானுடைய ஆதிக்கத்துக்காகத் தான் இருக்கிறதென்பதை மக்களிடையே விடாமல் எடுத்துச்சொல்லி வருகிறேன், யாவருக்கும் தெரியும். அந்த காங்கிரசிற்கு நம் நாட்டிலே இருந்து கொண்டு அந்த அரசாட்சியை நடத்துகிறார் காமராசர். நான் காமராசரை ஆதரிக்கவில்லையா? அதைப்பற்றி நான் வாழ்த்தவில்லையா? இல்லை அவருக்கு வெற்றி வேண்டுமென்று கவலைப்படவில்லையா? எதனாலே? காங்கிரஸ் ஒருபக்கம் இருந்தாலும் அவர் நமக்கு வேண்டியவர், நம் கருத்துக்கு அவர்களாலே கூடுமானவரைக்கும் செய்யக்கூடியவர் என்பதினால். அதேமாதிரி சாமிகளுடைய வேறு-மற்ற-பல கருத்துக்கள் எப்படி இருந்தாலும் அதை நமக்குப் புரிந்துகொள்ள முடி

யாது போய்விட்டாலும் ஏதோ நமக்காக என்ன கொள்கைகளோ—என்ன நம் தேவையோ அவைகளுக்கு அடிகளார் முன் நிற்கின்ருர்கள். நம் நாட்டிலே பல அடிகளார் இருக்கிருர்கள். ஏன் மற்றவர்கள் முன்வரவில்லை. அதை நீங்கள் பார்த்தால்—சிந்தித்தால்—உங்களுக்குத் தெரியும். அது ஒரு பெரிய பதவி. அந்தப் பதவிக்குள்ள பெருமை எல்லாம் நமக்குத் தெரியும். அதை அடிகளார் பாதுகாத்துக்கொண்டு நம்முடைய காரியங்களுக்கெல்லாம், ஆசி கூறவும் இன்றையதினம் அருள் கூர்ந்து அருளினர். நீங்கள் எடுத்துக்கொள்ளுகிற இந்த இரண்டொரு காரியத்திற்கு நான் எந்த நிலைக்கு இருக்கிறேன். இதற்குமேல் என்ன வெற்றி வேண்டும்? நம்மவர்கள் சிந்திக்க வேண்டும். அப்பேற்பட்ட அடிகளாருடைய ஆசியும் அதற்கு வேண்டிய ஆதரவும் நமக்கு இன்றைய தினம் கிடைத்திருக்கிறது. முதலாவதாக ஜாதியைப்பற்றி எடுத்துச்சொன்னர்கள். நம்முடைய இந்த எழுபத்தெட்டாவது வருஷத்திய தொண்டு பெரும்பாலும் ஜாதியைப்பற்றி இருக்கும் என்று சொன்னேன். ஏன் அப்படிச் சொன்னேன் நீங்கள் சிந்திக்கவேண்டும். நான் நினைக்கிறேன்—தவருக இருக்கலாம்—இந்த ஆண்டும் ஒரு சமயம் காமராசரே பதவிக்கு வருவார். காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெறுவார்கள் அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. பதவிக்குக் காமராசரே வரக்கூடும். (கைதட்டல்)

அவர் பதவிக்கு வந்தால் அந்த சமயத்திலே நமக்குக் கொஞ்சம் ஆறுதல் இருக்கும். அதிகமாக நமக்குக் கேடு செய்கிற அந்த ஸ்தாபனத்தி

னுடைய வழக்கம்போல, இவர் காலத்திலே தமிழர்களுக்கு பெரும் கேடு ஏற்படும் என்று நினைக்கவில்லை. அப்படி இல்லை என்று இருக்கிறபோது நமக்கு அதைச் சமாளிக்கிற தொண்டு இல்லாமல் நம் வேலையை நாம் தாராளமாய்ப் பார்க்கலாம். ஏதோ நமக்குத் தோன்றிய காரியங்களைச் செய்கிறோம். அதற்கு அரசாங்கத்தின் மூலம் தொல்லை வராது. நாம் நேராக அரசாங்கம் தொல்லை கொடுக்கும்படியான அளவிலே அப்படிப்பட்ட காரியத்திற்குப் போவதாக இருந்தால், அதை வேறு யாராவது வந்திருக்கிற காலத்தில் நாம் போகலாம். நம் காரியத்தைச்செய்ய அவர்கள் இடங்கொடுக்க மாட்டார்கள். ஆனதினாலே, அவர்களோடு வாதாடலாமென்று, ஒருக்கால் காமராசரே வருவாரேயானால் அவர் காரியத்திற்கு நாம் தொந்தரவுக்குப் போகாமல் இருப்போமேயானால், நம் காரியங்களைச் செய்வதற்குப் போதிய வசதி இருக்கும். அப்படிப்பட்ட வசதியைப் பெரும்பாலும், சாதியை ஒழிப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். மற்றபடி உள்ளதை சொல்லி இருக்கிறேன். அதாவது நம்முடைய மக்களுக்கு, அரசியல் முதலிய தொழில் ஸ்தாபனங்களிலே விகிதாசாரமான இடம் கிடைப்பதற்கு வேலை செய்யலாம். கிளர்ச்சி செய்யலாம் என்று அந்த கிளர்ச்சியும் செய்யப்படும், அப்பொழுது நான் நினைக்கிறேன் அதிகமான தொல்லை வராது; வந்தால் பார்த்துக்கொள்வோம். அப்படிச் செய்வதற்கு ரொம்ப வசதி இருக்கிறது. சாதி ஒழிப்பதற்கு நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளிலே அடிகளார் போன்றவர்களுடைய ஆதரவு இருந்தால் எவ்வளவு நமக்குக் காரியம் எதிர்ப்புக் குறையும், எளிதிலே முடியும், இப்படி

யெல்லாம் வசதி உண்டு. அந்தக் காரியத்திற்கு அவர்கள் முன் நிற்கிருர்கள். அடிகளாரைப் போலப் பலர் இருக்கிருர்கள் என்று சொன்னேன். அதை இதையெல்லாம் காதிலேகூடப் போட்டுக் கொள்ள மாட்டார்கள். எதற்கு "வீண் தொந் தரவு" ஏதோ நம் வேலையைப் பார்க்கிருேம் அடி களார் துணிந்து இருக்கிருர்கள். ஏதோ தன்னு லான ஒரு திருத்தம் என்கிற உணர்ச்சி அவர்களுக் குள் இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். இல்லாவிட்டால் மரியாதையோடு அந்தப் பதவி யுடனே என்றும் அதிக விளம்பரமாகவே இருக்கும் படியாக நடந்துகொள்ள எளிதிலே முடியும். நடந்துகொள்வதும் சவுரியந்தான். ஆனுல் அந் தப் பதவியை எதிர்பாராமல் அதற்குண்டான மற்ற காரியங்களை எதிர்பாராமல் ஏதோ இந்தப் பதவி யைக்கொண்டு என்ன செய்ய முடியும்? பலன் என்ன? அதை அவர்கள் முக்கியமாகக் கருதி இருப்பதிஞலேதான் நம்முடைய இந்த முக்கிய மான ஒரு கொள்கைக்கு தம்மாலானதைச் செய்யத் தயார்ாக இருக்கிறேன் என்று அவர்கள் அருள் கூர்ந்தார்கள். அது நமக்கு மிகவும் வெற்றி. தவிர, நம்மவர்களுக்கும், நம்முடைய தோழர்களா கப் பின்பற்றுகிறவர்களுக்கும், நாம் எந்த நிலை மைக்கு வந்திருக்கிருேம் என்பதை நீங்கள் உணர வேண்டும். அடிகளாரைப் போன்றவருடைய ஆசி யைப் பெறும்படியாகவும், மற்ற அனேகருடைய ஆசி நல்லெண்ணம் நம்மீது வரும்படியாகவும் என்னும் நிலைமைக்கு நாம் வந்திருக்கிருேம். நாம் வருவதென்ருல் லேசில்லை. இது நிச்சயம்.

நாம் பெரிய கிளர்ச்சி செய்கிருேம். பெரும் பெரும் புரட்சிகளைச் செய்கிருேம். புரட்சியும்

கிளர்ச்சியும் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆனால், நம் நாட்டிலே ரொம்ப சுலபம் என்று சொல்லும்படியான அளவிற்கு இன்றைய நிலைமை வந்திருக்கிறது என்று சொன்னார். அதற்கு அடிகளார் போன்றோர்களுடைய ஆமோதிப்பும், மற்றும் பலருடைய மனம் திரும்புதலும் ஆகிய பெரிய காரியங்கள் இதைக்கொண்டே நீங்கள் பெருமை அடையவேண்டும். என்னுடைய கழகத் தோழர்களுக்குச் சொல்லுகிறேன் நாம் செய்திக்கிறது கொஞ்சம் தான். செய்யவேண்டிய காரியம் ரெம்ப இருக்கிறது. நான் பெருமையாகச் சொல்லவில்லை. தற்பெருமை யாகச் சொல்லவில்லை, நாம் கருதுகிற காரியத்தைச் செய்ய நம் நாட்டில் மிகக் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள். நாம் மேற்கொண்ட காரியங்களைச் செய்வதற்கு-ஆதரவு அளிப்பதற்கு நம் நாட்டிலே மிகக் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள். இன்னும் நாள் போனால் அதிகமாகும். எனக்கு அதில் சந்தேகம் இல்லை. ஆனால், இந்தக் கொஞ்சம் பேர் இருக்கிற நிலையிலே, அடிகளார் போன்றவர்களின் ஆசி ஆதரவும் எல்லாம் நாம் அடைகிறோம் என்றால் நாம் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கிறோம் நீங்கள் யாவரும் கருதவேண்டும். இதை வேறு யாராவது அந்த வைதீக முறையிலே பேசுவதாக இருந்தால் கட்டாயம் நம்மை பெரிய தவசிரேஷ்டர் என்று சொல்லுவார்கள். எனக்குத் தவத்திலே நம்பிக்கை இல்லை. தவம் என்கிற வார்த்தைக்குத் தமிழிலே என்ன அர்த்தம் இருக்கிறதென்று சொல்லுகிறது யாரும் எனக்குச் சொல்லவில்லை. அது எப்பொழுதாவது வெளியாகும். அந்தத் தவம் என்று காட்டப்படும் இடங்களில் எல்லாம் பகுத்தறிவுக்கு ஒப்பாது அந்தத் தவத்தை ஏதோ

தவம் செய்தான், அவனுக்கு இயற்கைக்கு மாருன அனேக காரியங்கள் கிடைத்தது மாதிரியிலே புராணத்திலே அந்தத் தவத்தைக் காட்டப்பட்டிருக்கிதே தவிர, தனித் தமிழிலே தவம் என்ருல் என்ன, அதற்கு வருகிற அந்தப்பலன் என்றெல்லாம் சொல்லுகிருர்களே அதெல்லாம் என்ன பொருள் என்பது எல்லாம் எனக்குத் தெரியவில்லை விளங்கிக் கொள்ள முடியவில்லை. நான் நினைக்கிறேன் ஒரு பெரிய வரப் பிரசாதிப் பெற்றுள்ளதென்று சொல்லாததினுல் இயற்கைக்கு மேலான பலம் உடையான் என்று சொல்லலாம். சாதாரணமாக மற்ற கழகங்களையும், ஸ்தாபனங்களையும் எடுத்துக்கொண்டு பார்க்கும் பொழுது, நமக்குள் பேசுகிருேம் அதுதான் தற்பெருமை என்று கருதாதீர்கள். எனக்குத் தோன்றுவதைச் சொல்லுகிறேன். மற்ற ஸதாபனங்களைவிட நாம் கொஞ்சம் அதிகமான பலமுடையவர்களாக இருக்கிருேம். ஏன்? துணிந்து நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிருேம். துணிந்து ஏதோ செய்ய வேண்டியதைச் செய்கிருேம். சமாளிக்கிருேம், இதுதான் நான் சொல்லுவது. எதினுலே, அவர்கள் அந்த வைதீக முறைப்படி சொல்லுவது அவர் செய்த தவத்தினுலே என்று, அதற்கு ஏதோ கடவுள் இறங்கிக் கொடுத்தலினுலே என்று தவத்தையே இன்னதென்று புரிந்துகொள்ளவில்லை, வரம் என்ருல் இன்னதென்றே தெரியாது. எப்படிக் கடவுள் கொடுக்கிருர் என்பதை நாம் புரிந்துகொள்கிற சக்தியும் என்னுல் அடையமுடியவில்லை. ஆனுலும், நான் என்ன சொல்லுகிறேன் மக்களுடைய ஆதரவு அவ்வளவு பெற்றுவிட்டோம். அதுதான் தவம் என்று சொல்லுவதும், வரப்பிரசா

தாம் என்று சொல்லுவதும், நாம் மக்களுடைய ஆதரவு பெற்றிருப்பதும் அதிக பலத்தைக் கொடுக்கக் கூடியது. யாரும் அவ்வளவு சுலபமாக எதிர்க்கலாம் என்கிற, கருத முடியாத அளவிற்கு, இது நம்முடைய கொள்கையினுலே யென்று இல்லாவிட்டாலும் என்று சொல்லுகிறேன். நம்முடைய ஒழுக்கத்தினுலே என்று சொல்லுகிறேன். நம்மிடத்திலே மற்றவர்கள் சந்தேகப்படுவதற்கு இடமில்லாமல் நமக்கு துர் எண்ணம் கற்பிக்கப்பட்டதற்கு வசதி இல்லாமல் தப்போ, தவருே என்று இருந்தாலும், நாம் மனதார நல்லெண்ணத்தோடு, நம்மாலானதைச் செய்துகொண்டு வருகிருேம். எங்களுடைய கருத்து பொதுமக்களிடையே பரவி இருப்பதினுலே, சிலர் பைத்தியக் காரத்தனமென்று நம்மீது குறை சொன்னுலும், ஏதோ அப்படி நினைக்கிருன் என்று தள்ளிவிடுகிருர்கள். அது நமக்குப் பெருத்த இடையூறுக்கும் ஆளாவதில்லை. அந்த நிலைதான் நமக்குக் கொஞ்சம் பலம் இருக்கிறதென்று. அந்தப் பலத்தைத்தான் வேறு மொழியிலே மற்றவர்கள் தவம் என்று சொல்லிக்கொள்வது. வரப்பிரசாதம்என்று சொல்லிக்கொள்வதெல்லாம் இல்லாவிட்டால், நாம், இரணியன் செய்த என்ன காரணங்களில் செய்த பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் செய்த தவசை நம் அறிவின் மூலம் ஒப்புக்கொள்ள முடியுமா ?

இதை யெல்லாம் பார்த்தால் அவ்வளவு பலசாலியாக இருந்திருக்கிருன், அதற்குக் காரணம் அவ்வளவு மக்கள் ஆதரவு இவைகள்தான், அது போன்ற அளவிலே நாம் முன்னேற முடியும். நமக்கு இம்மாதிரியான பெருத்த ஆசி யெல்லாம்

கிடைத்திருக்கிறது. இதை நல்ல நேரத்திலே நான் தெரியப்படுத்திக் கொள்வது, நம்முடைய மக்களி டத்திலே ஒழுக்கம் இருக்கவேண்டும். உங்களுக் குப் பக்தி இருந்தாலும் சரி. இல்லாவிட்டாலும் சரி உங்களிஷ்டம். நான் சொல்லுகிறேன் - என் அருமை நண்பர்களுக்குச் சொல்லுகிறேன்-தோழர் களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் ஒவ்வொருவருக் கும் ஒழுக்கம் இருக்கவேண்டும். பக்தி இருப் பதைப்பற்றி உங்களிஷ்டம். பக்தி அவனுடைய சொந்தக்காரியம். நான் பக்தி இல்லாமல் இருந் தால் உங்களுக்கு ஒன்றும் கெடுதல் ஏற்படாது. எனக்குத்தான் கெடுதி ஏற்படும். நான் அதிக பக்திமானுக இருந்தரல் எனக்கு மோட்சம் கிடைக்க லாம். உங்களுக்கு ஒன்றும் நடக்காது அதினுலே, பக்தி அவனவனுடைய சொந்தக் காரியம். ஒழுக்கம் அப்படி அல்ல. மற்றவர்களேப் பாதிக்கக் கூடியது. நாம் ஒழுக்கமாய் நடந்துகொள்வதின் மூலம் மற்ற வர்களுக்கு உ-ண்மை உண்டு. நன் ஒழுக்க ஈனர்க ளாய் நடந்துகொள்வதின் மூலம் மற்றவர்களுக்குத் தொந்தரவு - தொல்லேயுண்டு. ஆனதினுலே பக்தி யைக் காட்டிலும் ஒழுக்கத்தைப் பிரதானமாக நினேத்து, ஒவ்வொரு மனிதனும் மற்றவரிடத்தில் அன்பும், மற்றவர்களிடத்திலே அருளும் காட்டுகிற வர்களாய் இருக்கவேண்டியது நம் தொண்டினு டைய கருத்தே அதுதான். நாம் செய்யப்போகிற தொண்டினுலே ஏற்படவேண்டிய பலன் எல்லோ ருக்கும், ஒருவருக்கொருவர் அன்பு, ஒருவருக்கொரு வர் அருள் இருக்கவேண்டும். அப்படி ஏற்படுகிற போது ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வாக நினேப் பார்களா? ஒருவரை யொருவர் வஞ்சித்து மோசடி செய்ய நினேப்பார்களா? இல்லே. அதனுலே, நாம்

இந்த அடிப்படைக்காகவே போராடுவோம். அது நம்மிடத்திலேயே இல்லாவிட்டால் நம்முடைய போராட்டத்திற்கு என்ன மரியாதை. என்னடா நாம் என்ன செப்படி வித்தைக் காரர்களா ? நானும் ஏமாற்றுகிறவர் அல்ல. ஏதோ நமது மனதில் உள்ள உண்மையை வைத்துக்கொண்டு சரியாகவோ தப்பாகவோ போராடுவோம்.

அப்படிப் போராடுகிறவர்கள் தங்களைத் தாங்களேயாவது சரியாக நாம் போராடுகிறோம் என்கிற எண்ணம், தங்களுக்காவது வரவில்லையானால், நம் போராட்டத்திற்கு என்ன பலம் இருக்கும். ஆனதினாலே, தங்கள் தங்களுக்கு ஒவ்வொருவரும் ஒழுக்கம் உடையவர்களாக இருக்கவேண்டும். மனிதருக்கு உண்டான மற்ற குணம் நம்மிடத்திலே, கோபம் இருக்கும், பின்னே ஆத்திரம் இருக்கும், பலாத்காரம் இருக்கும், ஆங்காரம் இருக்கும், ஏதாவது வரலாம்; அல்லது அதுதான் அதற்கு மார்க்கம் என்று சில சமயங்களிலே தோன்றலாம். ஆனாலும் ஒழுக்கத்திற்கு மாறாகச் சமாதானம் சொல்லவே முடியாது. ஒழுக்கம் என்றால் என்னென்ன என்று வாதாடுவார்கள். அதிக தூரம் நீங்கள் ஒழுக்கத்திற்குத் தேடவேண்டியதில்லை. மலைப்பிரதேசத்திற்குப் போய் தேடவேண்டியதில்லை. நாம் மற்றவன் எப்படி நம்மிடத்திலே நடந்துகொள்ள வேண்டும். மற்றவன் எப்படி நடந்துகொண்டால் நாம் மகிழ்ச்சி அடைவோம், திருப்தி அடைவோம் என்பதைத் திருப்பிப்பார்க்க வேண்டும் அவ்வளவுதான். அப்படி நாம் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டும்.

மற்றவன் திருப்தி அடையும்படியாக நாம் நடக்கவேண்டும் என்று திட்டம்போட்டுக்கொள்ள வேண்டாம். இது ஒவ்வொருவருக்கும் ஊருக்கும் திட்டமாக இருக்கும். அதைப்பற்றி இல்லை. சமுதாயத்திலே நம்மிடத்திலே காணவேண்டியது முக்கியம். அதை நாம் ஒவ்வொருவரும் ஆணு கட்டும் பெண்ணுகட்டும் கைக்கொள்ளவேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பங்களிலே நீங்கள் எனக்குப் பாராட்டுதல் என்னவென்ருல் எழுபத்தேழு வயது பிழைத்துவிட்டேன், எழுபத்தெட்டாவது வயதில் ஊறுகிறேன். எழுபத்தெட்டாவது வயது நல்ல வெற்றிகரமாக இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதில்தான் வெற்றி ஏற்பட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. எனக்கு அதுதான் வேண்டும், உங்களுடைய வெற்றிதான் என்னுடைய வெற்றி, அதுதான் என்னுடைய நிதி என்று கருதுகிறேன். அவரவர்கள் நினைப்பார்கள் சொத்துத் தேடி அவரவர்களுக்கு வைத்துக்கொண்டிருப்பதுதான் அவர்களுக்கு நிதி என்று. அதைத் தப்பாக அவர்களுடைய நிதி என்று அவர்கள் கருதுகிருர்கள். அவர் நிதியாய் இருப்பதெல்லாம் அவர்கள் கண் படுகிறவரையிலும்தான். அவர்களுடைய நிதி, அவர்களுடைய வீடு, அவர்களுடைய பெரிய மற்ற ஸ்தாபனம், அவர்கள் மூடினுல் அந்த நிமிஷத்திலேயே அவை மற்றவர்களுக்குப் போய்விடும். இவராலே முடியாது. இறந்தபிறகு என்னுடையது என்று சொல்வதற்கு இடமும் இல்லை. இவருடையது ஆவதற்கு இயற்கைச் சட்டமும் இல்லை. அவர் மகனுடையதாய்ப் போய்விடுகிறது. அவனுடையது எட்டு நாளைக்கு இருக்கும், அப்புறம்

அவன் ஒழிந்தால் அவன் மகனுடையதாய்ப் போய் விடும். அவன் கெட்ட நடவடிக்கையுடையவனாய் இருந்தால் மற்ற அதைக் கொள்ளுகிறவர்களுக்கு அது போய்விடும். ஆனால் நான் நினைத்துக் கொண்டதுதான் எனக்கு எனக்கு என்று நினைப்பது தவறு. எனக்கு நிதியென்று இருக்க வேண்டுமானால் நான் காலமான பிறகும் அது என்னுடையதாகவே இருக்கவேண்டும்.

எப்பொழுதுமே என்னுடையதென்றே சொல்லும்படியான தன்மை வேண்டும். ஏனென்றால், நல்ல மனிதன் மனதிலே அந்த ஆசை வைத்துக் கொண்டிருக்கிறான். மனிதன் வாழ்வுக்கு இலட்சியம் இல்லையானாலும் தனக்கு ஒரு புகழ்வேண்டுமென்பதிலே ஒவ்வொருவனும் இலட்சியமுடையவன். பின்பு அது எப்படி என்பதே தவறிப்போய் விடுகிறான். இலட்சியமே இல்லாமல் ஏதோ விழுந்து புரள்கிறான். எதற்காகப் பிறந்தான் என்பது தெரியாது, எதற்காக வாழ்கிறான் என்பது தெரியாது, எதற்காகப் படிக்கிறான் என்பது தெரியாது, எதற்காகப் பதவிக்குப் போகிறான் என்பது தெரியாது, எதற்காகப் பணம் சேர்க்கிறான் என்பது தெரியாது, ஒன்றும் தெரியாது. அது சுற்றுச் சார்பைப் பார்த்து இப்படியே போய்க்கொண்டிருக்கிறான். ஆனால் இவனுடைய உள்ளத்திலே ஒன்று உண்டு. அது அவனுக்குப் புகழ்வேண்டும் - தன்னை மற்றவர்கள் பெருமையாகக் கருதவேண்டும் - ஏதோ ஒன்று இந்த இலட்சியம் ஜனசுபாவ இலட்சியம். மனிதனைப் பொருத்த வரையிலும் சொல்லுகிறேன். அந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமானால்-அவனுக்குப்புகழ் இருக்கவேண்டும்.

அவன் தேடின நிதி அவனுடையதென்று வெகு நாளேக்காவது சொல்லும்படியான ஒரு தன்மை வேண்டும். அப்படிப்பட்ட நிலேமை ஏற்படவேண்டுமானல், மக்களிடத்திலே ஒப்புவித்துவிட்டு போகிறதுதான் மக்களுக்காக இன்று செய்யாது அமைப்பு செய்வது, வைத்துவிட்டும் போவது இவைகள் தான் அவருடைய சொந்தமாக இருக்கும். அதுபோலவே நான் ஏதோ செய்து, மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்று பயனில்லே என்று சொல்வார்கள் இல்லே...(தொடர்ச்சி இல்லே)

(அடுத்து முடிவுரையாக அடிகளாரவர்கள் சில நிமிடங்கள் பேசினர்கள். அதுபோது குறிப்பிட்டதாவது)

அன்புடைய பெரியாரவர்களே! பொதுமக்களே! இந்த விழாவில் கலந்துகொண்டதற்காகத் தொடக்கத்தில் நான் அடைந்த மகிழ்ச்சியைவிட, பெரியாரவர்களுடைய பேச்சுக்குப்பின்பு அதிக மகிழ்சசி அடைகின்றேன். பெரியாரவர்கள் “ நான் கடவுள் இல்லே என்று சொல்பவன் இல்லே.”என்று சொன்னதற்காக என்னுடைய திருப்தியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சமய வாழ்வினுடைய அடிப்படை ஒரு கடவுளே ஒத்துக்கொள்வதில்தான் இருக்கிறது. கடவுளே ஒத்துக்கொண்டு இதிகாசம் புராணங்கள், வழிபாட்டுத்துறையில் உள்ள முறைகளில் மாறுபடுவது நாத்திகமாக முடியாது. கடவுளே ஒத்துக் கொள்ளாதவன்தான் நாத்திகன். சமயச் சார்புடைய வரலாறுகளிலும் கூட கடவுள் நம்பிக்கையை அடிப்படையாக

வைத்து ஒன்றுபட்டு மற்றைத் துறைகளில் மாறுபட்டவர்கள் வரலாற்றையே பெரும்பாலும் பார்க்கிறோம். கற்றளிக் கோயிலெடுத்த பல்லவ மன்னனுக்கும், அகத்தில் கோயிலெடுத்த பூசலார் நாயனார்க்கும் கடவுள் நம்பிக்கையில் வேற்றுமை இல்லை. செயலில் வேறுபட்டார்கள். சிவகோசாரி யாருக்கும், கண்ணப்பனாருக்கும் கடவுள் நம்பிக்கை யில் வேற்றுமை இல்லை செயலில் மாறுபட்டவர் கள். அது மட்டுமன்றி இருவரும் அவர்தம் கண் ணோட்டத்தின்படி, மற்றவர் செய்ததை முறையற் றது என்று கூறுகின்றனர்.சாக்கியநாயனார் கடவுள் நம்பிக்கைக் கண்ணோட்டப்படி பக்தர் ஆகின்றார். செயல்படி அவர் கல்லெறிந்தவர். ஆதலால், தெய்வ மெனும் சித்தம் உண்டாதலே சமயவாழ்வின் அடிப் படை. சித்தத்தை அளந்து பார்த்தலே முறையும் மரபும் ஆகும். சமயச் சார்புடைய வரலாறுகள் பலவற்றில் உலகியல் கண்ணோட்டத்திற்கு முரண் பட்டன போலத் தோன்றும். ஆனால், சித்தத்தின் நிறைவை நோக்கும்பொழுது இம் முரண்பாடு தோற்றுவதில்லை; இல்லை மறந்தே போய்விடு கிறது. சேக்கிழார் பெருமான் அருளுடையப் பெரு மக்களின் சிந்தைக்கே முக்கியத்துவம் கொடுத்து செஞ் சொற்காப்பியம் செய்தார். பெருமக்களின் வாழ்வில் காணப்பட்ட பிற நிகழ்ச்சிகளுக்கு அவர் களின் சிந்தையையே உரைகல்லாகக் கொண்டு செயல்பட்ட முறைகளுக்கெல்லாம் விளக்கமும் சமா தானமும் தந்துள்ளார். மீண்டும் சிந்தையைத் தொட்டுப் பார்க்கும் சேக்கிழார் பெருமான் வருவா ராயின் இம்மாநிலம் பெரும்பேறு பெற்றதாகும். எனவே, தாங்கள் நான் கடவுள் இல்லை என்று சொல்பவன் இல்லை என்றும், அதைப் புரிந்து

கொள்ளக்கூடிய சக்தி இன்னும் பெறவில்லை என்று கூறியதற்கு நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவத்தைப் பற்றிப் பெரியாரவர்கள் குறிப்பிட்டார்கள். தவம் தமிழகத்தில் இருந்த ஒரு வாழ்க்கை முறை ஆகும். மற்றைய மொழியினர் கண்ட தவத்திற்கும், தமிழர்கள் கண்ட தவத்திற்கும் நிறைய வேறுபாடு உண்டு. தமிழன் கண்ட தவமுறையைப் பற்றி திருவள்ளுவர் தெளிவாகச் சொல்லுகின்ருர்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண்செய்யாமை
அற்றே தவத்திற்கு உறு"

அதாவது தமக்கு வருகின்ற துன்பத்தைப் பொருத்துக் கொள்ளுதலும், பிறருக்குத் துன்பம் செய்யாமையுமே தவம் ஆகும் என்று தேற்றேகாரம் கொடுத்துக் கூறுகின்ருர். பின்னே சொன்னதைத் தான் பெரியாரவர்கள் ஒழுக்கம் என்ற பெயரால் இப்பொழுது குறிப்பிட்டார்கள். பக்தியையும் ஒழுக்கத்தையும் பற்றிப் பெரியாரவர்கள் குறிப்பிட்டார்கள். அப்பொழுது பக்தி ஒரு மனிதனுக்கு தனிப்பட்ட சொந்த விஷயம் என்றும், ஒழுக்கம் சமுதாயச் சார்புடையது என்றும் குறிப்பிட்டார்கள். அப்பொழுது பக்தி இருந்தாலும் சரி, இல்லாது போனுலும் சரி ஒழுக்கம் அவசியம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஆனுல், பக்தி இருந்தால்தான் ஒழுக்கம் உறுதிபெற முடியும், பக்தியும் ஒழுக்கமும் கொடியும் கொம்பும் போல. ஒழுக்கம் என்ற கொடி, பக்தி என்ற கொம்பிலே, பற்றிப் படர்ந்தால்தான் ஒழுக்கம் நிலைபெற்றிருக்க முடியும். எங்கணும் நீக்கமற

நிறைந்து செயலோடன்றிச் சிந்தையையும் கண் காணித்து வருகின்ற ஒரு கடவுள் உண்டு என்று நினைக்கின்ற பொழுதுதான் அவன் சிந்தையாலும் செயலாலும் பிறருக்குத் தீங்கிழைக்காமல் வாழமுடி கிறது. ஆதலால் ஒழுக்கம் உறுதிபெறப் பக்தி வேண்டும். பக்தி பயன்படும் வகையில் செயல்பட ஒழுக்கம் வேண்டும். நீண்ட நேரம் ஆகிவிட்டமை யால் முடிவுரையை இன்னும் நீட்டிக்க ஆசைப்பட வில்லை. உங்களோடு சில கோணங்களில் கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும் தாங்கள் அதைப் பொருட்படுத்தாது, தங்கள் மேடைக்கு அன்புட னும் பரிவுடன் அழைத்து மகிழ்ச்சி ஊட்டினமைக்கு நன்றியையும் வாழ்த்தையும் உரியதாக்குகின்றேன்.

### பெரியார் பிறந்தநாள் விழாவிற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வாழ்த்துரை

# நாம் காணும் பெரியார்!

இன்று தமிழகத்தின் சமுதாய மறுமலர்ச்சி இயக்கத் தலைவர் ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள் பிறந்த நாள். மனித சமுதாயத்தின் வரலாறு காலங் கடந்த மூப்புடையது. காலத்திற்குக் காலம் பல்வேறு கருத்துக்களோடு இயைந்து சமுதாயம் வளர்ந்து வருகிறது. எப்பொழுதுமே மனிதனுக்கு மாற்றம் காண்பதில் விருப்பம் அதிகம். நெல்விளையும் கழனி யில் புல்லும் முளைப்பதுபோல் மனித சமுதாய எண்

ணக்கருத்துக் குவியல்களில் நல்லனவும் தலைகாட்டும்; அல்லனவும் தலைகாட்டும். இது ஒரு நியதி. அவ்வப்பொழுது மனித சமுதாயத்தை சமூகத் துறையாகவோ, அரசியல் துறையாகவோ, சமயத் துறையாகவோ பிரித்து வைத்து, தம் வயப்படுத்தி அழைத்துச் செல்லும் தலைவர்கள் தோன்றியுள்ளனர். எப்பொழுதோ ஆயிரம் ஆண்டுகளுக்கொரு தரம் மனித இனத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரிக்காமல் ஒரு குலமாக்கி அழைத்துச் செல்லும் உத்தமத் தலைவர்களும் தோன்றினர் பொதுவாக மனித இனத்திற்கு பிரிவு தீயது. அது சாதியின் பாற்பட்ட பிரிவாயினும் சரி, அல்லது எத் துறையின்பாற்பட்ட பிரிவாயினும் சரி. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற பழந்தமிழர் கொள்கை மீண்டும் சமுதாயத்தில் இடம் பெறல் வேண்டும். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று உயர்ந்தோர் காட்டிய உறுதிநெறி உரம் பெறுதல் வேண்டும். அண்மையில்தான் மேற்றிசை நாட்டார் ஒருலகக் கருத்தைக்கொண்டனர். ஆனல் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் ஒருலகக் கருத்தைக்கொண்டு வாழ்ந்தனர்.

இங்ஙனம் "ஒருகுல வளர்ச்சி" வளர்ந்து வளம் பெறல் வேண்டுமானல் எப்படியோ நம்மிடத்தில் நுழைந்துவிட்ட சாதி உணர்ச்சி மறைந்தொழிய வேண்டும்; மனித இனத்தைத் தன்னலத் துறையில் அழைத்துச் செல்லுகின்ற சிறுமதி படைத்த தீய உணர்ச்சி சாதி என்ற பொல்லா எண்ணத்திற்கு உரித்தாகும். சாதியை ஒழித்து சமரச சமதர்ம சமுதாயம் காண்பதே பன்னெடு நாளைய தமிழ்ப் பெரியோர்களின் எண்ணம். அத்தகைய பெரியோர்

களின் பரம்பரையில் நமது பெரியார் அவர்களும் வந்தவர். அவருடைய கடந்த கால வாழ்நாட்களில் கண்ணியமாக சாதியை எதிர்த்துச் சாடிய போராட்டங்களும், அப்போராட்டங்களால் அவர் அடைந்த கல்லடியும் சொல்லடியும் கணக்கிலடங்கா. அவ்வமயம் சாதிமுறையால் தம்மை வளப்படுத்தி வாழ்வு பெற்ற ஒரு சிலர் பெரியார்மீது கடுஞ்சினம் கொண்டு கனல் கக்கினர். பொய்யின் அடிப்படையில் தன்னல் நோக்கோடு எழும் வெகுளி என்ன தான் செய்யும்? இன்று தமிழகத்தில் சாதிச் சழக்குகள் சருகெனக்காய்ந்து, உதிர்ந்து வருகின்றன. விரைவில் சாதி என்ற சொல் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே அகராதிச் சொல்லாகவே மாறிவிடும் காலம் வரும். அத்தகைய மெச்சத்தகு நற்பெரும் பணியில் ஈடுபட்டுள்ள பெரியார் அவர்கள் வாழ்க,

**சமயநெறி**

மனித இனத்தை நல்லன எண்ணத்தூண்டி, நல்லாற்றில் செயல்படச் செய்வது சமயநெறி. சமயநெறியின் அடிப்படையின் தத்துவமே இது தான். காலப்போக்கில், எப்படி, எக்காரணம் பற்றி என்று சொல்லமுடியாமல் சமுதாயத்துறையில் நுழைந்ததுபோலவே சமயத் துறையிலும் சாதி உணர்ச்சியும் ஏற்றத்தாழ்வு மனப்பான்மைகளும், சாத்திரப் புராணங்களின் பெயரால் நுழைக்கப்பட்டன. பழந்தமிழ் நூல்களும், தமிழ்த் திருமுறைகளும் இவற்றை வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. சமயம் என்றுமே வாழும் மனித இனத்தை வளப்படுத்தவே இருந்தது - இருந்து கொண்டிருக்கிறது - இருக்கவும் வேண்டும். ஆனல் மக்கள் வாழ்விலே மலர்ந்து

வளரவேண்டிய சமயநெறி, காலப்போக்கில் மனித இனத்தை விட்டுப் பையப் பைய அகன்று கோயிலுக்குள்ளே சிறைபுகுந்து கொண்டது. ஆதலால் மனித இனம் நயத்தக்க நாகரீகத்துடன் வாழ முடியாமற் போயிற்று.

இங்ஙனம் சொல்வதினுல் கோயில்கள் சமயத்தைக் கெடுத்து விட்டனவென்ரே, கோயில்கள் கூடாது என்ரே யாரும் விரைவில் முடிவுக்கு வரக் கூடாது. எடுத்துக் காட்டாக இருள்த் திரையைக் கிழிக்க, ஒளிமிக்க விளக்கு வேண்டும். ஆனுல் அவ் விளக்கொளி தன்னைச் சுற்றிலும் பரந்து கிடக்கின்ற இருளை நீக்கி ஒளி தந்து வாழ்வுதராமல் விளக்கிடத்தையே தேங்கிக் கிடக்கும்படி திரையிட்டு மறைக்கப்படுமானுல், விளக்கினை விரும்புவார் யார்? அதுபோலவே கோயில்கள் வேண்டும். அத் திருக் கோயில்களுக்குள் கருணையின் சின்னமாய் நின்றிலங்கும் திருவருள் நாற்றிசைகளிலும் பரவி, இருள் நீக்கி, துன்பத்தின் தொடர்பறுத்து, இன்பம் பயத்தல் வேண்டும். ஆனுல் அன்றும் இன்றும் என்றும் விளக்கு சுடர்விட்டு எரிகிறது. விளக்கொளியும் கடிதில் சுற்றிலும் பாய்கிறது. அத் தன்மை அவ்விளக்கின் இயற்கை, இயல்பு, எனினும் தன்னலமுடையார் சிலர் அச் சுடரொளிக்குத் திரையிட்டு, மூடித் தனக்கே உரியதாக்கி, தன் வாழ்வுக்கே பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். அது விளக்கினுடைய தவறு கிடையாது. தன்னலமுடையார் செய்த குற்றமிது. அது போலவே எங்கும் பூரணமாய் பொங்கித் ததும்பும் திருவருளை எங்கெங்கோ சிறைப்படுத்தி, தனிப்பட்டோர் வாழ்வு வளப்படுத்தப் பட்டது. இதன் விளைவாக சமரசத்

தின் அடிப்படையில் சமதர்ம சமுதாயத்தைக் காணும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட சமயமும் திருக்கோயில்களும் சுயநலக்காரர்களின் பாசறை யாக மாறின. இத்துறையில் விபரீத உணர்வுகள் இடையிலே புகுத்தப்பட்டன. இவ்விபரீத உணர்ச்சி களை எதிர்த்துப் போராடும் இயக்கத்தைத் தான் பெரியார் அவர்கள் தொடங்கினுர்கள். இச்சமயத் தில் நாம் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடிய வில்லை. அது எதிர்ப்பு எங்கோ தொடங்கி எங்கோ சென்று முடிந்திருக்கிறது என்பது தான். உண்மை யிலேயே பெரியார் அவர்களுடைய எண்ணமும் அதுதானே என்னவோ என்பது நமக்குத்தெரி யாது. ஆனல் பலர் அவ்விதமே நினைக்கின்றனர். அதாவது பெரியார் அவர்கள் சமய நெறியின் எதிர்ப்பாளர்; திருக்கோயில்களை உருக்குலையச் செய்பவர்: பரம்பொருளின் பரமவிரோதி என்பன வாம். இந்தச் சூழ்நிலையில் பெரியார் அவர்களுக்கு நம்முடைய விண்ணப்பம் ஒன்று உண்டு அதாவது பண்பட்ட சமயம் ஒன்று நாட்டிற்குத் தேவை. சன் மார்க்க சமயநெறி நாட்டிற்குத் தேவை. இந்த புனிதமான திருப்பணிக்குப் பயன்படுகின்ற திருக் கோயில்களும் தமிழகத்திற்குத் தேவை. இவை களின் மூலமே அல்லன நீக்கி, நல்லனகாண வேண் டும். இவ்விண்ணப்பத்தைப் பெரியார் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களோ என்னவோ நமக்குத் தெரியாது ஆனல் அதனைச் சொல்ல வேண்டியது நம்முடைய பொறுப்பும் கடமையுமாகும்.

**விழிப்புணர்ச்சி**

பெரியார் அவர்கள் சமயத்துறையில் செய்த கிளர்ச்சிகளின் பயனுக ஒரு விழிப்புணர்ச்சி நாட்டில்

K34w M19
N56



வந்திருக்கிறது. சமயத்துறையினர்கூட சமுதாய சேவையில் அக்கறை காட்டத் தலைப்பட்டுள்ளனர். இத்துறையில் பெரியார் அவர்கள் செய்த மகத்தான பணிக்கு நம்முடைய நன்றி.

இன்றையப் பெரியார் அவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் எல்லோரும் நாமும் கலந்துகொள்ளுகிறோம். எத்தனையோ துறைகளில் பெரியார் அவர்களுக்கும் நமக்கும் கருத்து ஒற்றுமை வேற்றுமைகள் உண்டு. இருப்பினும் அவருடைய சமுதாய மறுமலர்ச்சித் திருப்பணியில் ஈடுபட்டுச் செய்த ஒப்பற்ற நற்பணிகளை நாம் மறந்துவிட முடியவில்லை. இப்படிச் சொல்வதினால் சிலர் நம்மீதும்கூட வெறுப்புக்கொள்ளலாம். அப்படி வெறுப்பைக் காட்டுபவர்கள் பிரித்து வைப்பதின் மூலம் தன்னலத்தை வளர்த்துக்கொள்பவர்களே ஆவார்கள். வேற்றுமைக்குள்ளும் ஒற்றுமை காணும் விழுமிய பண்பு நாட்டில் வளரவேண்டும். ஆகவே சாதி ஒழிப்பு இயக்கத் தலைவராக, சமுதாய புனர் நிர்மாண இயக்கத் தந்தையாக விளங்கும் பெரியார் அவர்கள் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.